


The Trumpet of the Seventh Angel

# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்

மலர் - 8, இதழ் - 3, மே - ஜுன் 2022



R5275

## "THE GREATEST THING IN THE UNIVERSE"
## PART II- PHILOSOPHY OF THE ATTITUDE OF SYMPATHY
## "பிரபஞ்சத்தில் மிகவும் சிறந்தது"
## பாகம் II – இரக்கமான மனோபாவத்தின் தத்துவம்

"ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்." (எபேசியர் 4:32) "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பரம பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்." தவறாயிருக்கிற ஒவ்வொன்றிற்கும் பிறரது இழிவான அங்கீகாரத்தைப் பெற நாம் வற்புறுத்தினால், இந்த காரியத்தின் தீர்மானத்தை கடைசி வரை வற்புறுத்தினால், அது நமது இருதயம் ஒரு தவறான நிலையில் இருப்பதாக அர்த்தப்படுத்துகிறது. பிறகு நமக்காக தேவன் செய்யக்கூடிய சிறந்த காரியம் என்னவென்றால் நமக்கு சில நமது சொந்த மருந்துகளை கொடுப்பது தான். இதன்மூலம் அவர் நமக்கு நல்ல திருத்தம் செய்கிற பாடத்தை போதிப்பதுதான். அதன் மூலம் நாம் மற்றவர்கள் மேல் இரக்கம் கொள்ளுகிறவர்களாவோம்.

உலகத்தின் மீது இரக்கங்கொள்ளுதல், மன்னித்தல் போன்ற காரியங்கள் தமது குடும்பத்திற்கு வந்த பிறகு தமது பிள்ளைகளுக்கு கட்டளையிடுகிற அல்லது போதிக்கின்ற ஒன்றாக இருக்கின்றன. இது நமக்கு போதனை கொடுப்பதற்காக இருக்கின்றது. "தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" "எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை நமக்கு கிடையாதிருந்தால், நாம் புத்திரராயிராமல்....." நாம் கிருபையிலும் அறிவிலும் வளரும் போது இந்த பாடங்கள் நமக்கு தீவிரமடைகிறது. (எபிரேயர் 12:7,8)

நமது அறிவு பெருகுகிறதினால், ஒரு மனிதனின் கீழ்ப்படியாமையின் மூலம் எப்படி எல்லாரும் விழுந்தார்கள் என்பதை காண்கிறோம். இது இரக்கத்திற்கான ஒரு அடிப்படையை கொடுக்கிறது. நாம் இன்னும் தேவனுடைய முதிர்ச்சி அடைந்த பிள்ளைகளாவதினால், நமது இரக்கம் பெருகுகிறது. நாம் இந்நேரம் பட்டதாரியாவதற்கு தயாராயிருப்போம், நாம் மிகவும் உதவிகரமாயிருப்போம் என்று தேவன் விரும்புகிறார். நம் எதிரிகளிடம் இரக்கமாயிருப்பது நமது இருதயத்துக்கு சந்தோஷத்தைக் கொடுக்க வேண்டும். அவர்கள் நம்மை எப்படி நடத்துகிறார்கள் என்பது முக்கியமல்ல. சத்துருவானவனின் செல்வாக்கினால் அவர்கள் இவைகளை செய்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். நாம் அவர்களை ஆசீர்வதிக்கவும் நம்மால் முடிந்தவரை அவர்களுக்கு நன்மை செய்யவும் விரும்ப வேண்டும். அவர்கள் நமக்கு தீமை செய்திருந்தாலும், அவர்களைக் குறித்த எண்ணத்தை நாம் மாற்றிக்கொள்ளக்கூடாது. அதாவது நாம் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும் நன்மை செய்ய வேண்டும்; நம்மை நிந்திக்கிறவர்களுக்காகவும் நம்மை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் நாம் ஜெபம் பண்ண வேண்டும்.

நமது சத்துருக்களுக்காகவும், துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் நாம் விசேஷித்த விதமாக ஜெபிக்க வேண்டும் என்பது இதன் கருத்தல்ல. அவர்களுக்கு எதிராக இல்லாதபடி, நாம் ஜெபிக்க வேண்டும் என்பது தான். ஆவிக்குரிய காரியங்களில் இன்னும் வளர்ச்சி அடையாதவர்கள், "அவர்களை தண்டிக்கும்படி தேவனிடம் ஜெபிப்பேன்" என்று நினைக்கலாம். ஆனால் இயேசு அதுமாதிரி செய்யாமல், "உங்கள் சத்துருக்களுக்காக ஜெபியுங்கள்" என்று கூறுகிறார். அவர்களுக்காக நாம் எதைக் கேட்கவேண்டும் என்று அவர் கூறவில்லை. அவர்களது மூடநம்பிக்கையை நீக்கி, புரிந்துகொள்ளும் கண்களை திறக்க வேண்டும் என்பதை ஜெபத்தில் கேட்பதே சரியானதாக இருக்கும். இதுவே நாம் அவர்களுக்காக கேட்கக்கூடிய மிகவும் சிறந்த காரியமாக இருக்கும். இந்த மாதிரியாக நாம் அவர்களுக்காக ஜெபிப்போமானால் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார். நாம் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கக்கூடுமானால், எந்த விதத்தில் என்பதை அவர் காண்பிப்பார்.

### முதலாவது நீதி பிறகு அன்பு பின்தொடர வேண்டும்

தேவன் மிகவும் மகத்துவமானவர், நாம் அற்பமானவர்கள். தேவன் நம்மை நேசிக்கிறார் என்று கூறப்படுவது எவ்வளவு ஆச்சரியமான காரியம் ! புறஜாதி மதங்கள் இப்படிப்பட்ட எதையும் அங்கீகரிப்பதில்லை. அவர்களது தேவர்களை அவர்கள் சமாதானப்படுத்த வேண்டும். இல்லையென்றால் அவர்கள் (தேவர்கள்) அவர்களுக்கு தீங்கு செய்வார்கள் என்ற கருத்தே பரவியிருக்கிறது. ஒரு அன்பான தேவன் என்பது வேதாகம போதனைகளில் ஒரு விசித்திரமான ஒரு கருத்தாக இருக்கிறது. அவரது குணலட்சணத்தின் இந்த அம்சம், இஸ்ரயேலர்களோடு அவர் தொடர்பு கொண்டதில் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களில் தெளிவாக வெளிப்படுத்தவில்லை. தேவன் தமது நீதியை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி, பாவிகள் மேல் தண்டனை வரும்படி அனுமதித்தார். அவர் தூதர்களை நேசிக்கிறார் என்பதை நாம் உறுதியாக கூறுவோம். ஆனால் தேவன் மனிதனை ஒரு தடையின் கீழாக, ஒரு தண்டனையின் கீழாக வைத்திருக்கிறார். அந்த தண்டனையானது வருடா வருடம் நூற்றாண்டு நூற்றாண்டுகளாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இஸ்ரயேலர்கள் பிரமாணத்தைக் கைக்கொண்டால் அவர்கள் அவரது கிருபைக்குள்ளாக வருவார்கள் என்ற அறிவிப்பை கர்த்தர் கொடுத்திருக்கிறார். இது அவர்களுக்கு மறுபடியும் சாதகமானதாக காணப்படுகிறது. ஆனால்

இஸ்ரயேலர்கள் தோல்வியடைந்தார்கள். மனிதன் சீரழிந்து, வியாதிப்பட்டு மரிப்பதினால் மனுக்குலம் தேவனுடைய பார்வையில் தங்களது அழகை இழந்தார்கள். தேவனை பிரியப்படுத்துகிற மாணிக்கம் போன்ற குணங்களை மனிதன் இழந்தான். "நாம் எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம்."

நாம் புதிய ஏற்பாட்டின் காலத்திற்கு வரும்போது இரண்டு விதமான புதிய சாட்சியங்கள் கொண்டு வரப்படுவதை காண்கிறோம். அதாவது மனிதர்கள் பாவிகளாயிருக்கும் போது உலகத்தை நேசிக்கிறார் மற்றும் சபையை நேசிக்கிறார் என்பதாகும். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்." மனுக்குலம் அழிந்து தேவனுடைய ஆசீர்வாதத்தை அனுபவிக்கவும் வாழவும் தகுதியற்றதாக ஆனது. இப்படிப்பட்ட தண்டனைக்குக் கீழாயிருந்த அவரது சிருஷ்டிகள் அனைவர் மேலும் தேவன் ஒரு இரக்கமான அன்பை கொண்டிருந்தார். இந்த அன்பு எப்படி காண்பிக்கப்பட்டது? அவரது இந்த அன்பின் வெளிப்பாடு. அவர் தம்முடைய குமாரனை உலகிற்காக மரிப்பதற்கு அனுப்பியதின் மூலம் காண்பிக்கப்பட்டதை நாம் வேதத்தை ஆராய்ந்து கண்டு கொள்ளுகிறோம். இங்கே அவர் எவ்வளவு மேன்மையானவர் மற்றும் அவரது அன்பு எவ்வளவு மேன்மையானது என்பதை காண்பிக்க ஆரம்பித்திருந்தார்.

## தேவனுடைய அன்பிற்கு அடிப்படை

சத்துருவானவனால் தவறாக வழிநடத்தப்பட்டு, மூட நம்பிக்கைக்கு கீழாகவும், பலவீனமாகவும், விழுந்துபோன நிலைமையிலும் மற்றும் அறியாமையிலும் இருப்பதே மனுக்குலத்தின் பெருங்கஷ்டமாக இருக்கிறது என்று வேத வாக்கியங்கள் நமக்கு நிச்சயப்படுத்துகின்றன. மனுக்குலத்தின் இருதயங்கள் அந்த மோசமான நிலைமையில் இருப்பதற்கு அவர்கள் தெரிந்தோ அல்லது வேண்டுமென்றே செய்வதோ அல்ல என்று தேவன் கண்டதால், அதிலிருந்து விடுபடும்படியான வழியை அளித்திருக்கிறார். நாம் வேண்டுமென்றோ, தெரிந்தோ பொல்லாதவர்களாக இருந்தால், நம்மேல் இரக்கத்தை காண்பிக்கவேமாட்டார். தேவன், ஓட்டத்தில் நம்மை பார்க்கும் போது, நம்மில் வெகு சிலரே அவரைப் பற்றிய அறிவையும், அவரது குணலட்சணங்களாகிய நீதி, ஞானம், இரக்கம் மற்றும் அன்பு போன்றவைகளையும் அவரது ராஜ்யத்தின் கொள்கைகளையும் அறிந்திருப்பதாக காண்கிறார். ஆகையால் தேவன் கூறினதாவது: இந்த சிருஷ்டிகளுக்கு என்ன செய்யக்கூடும் என்பதை நான் பார்க்கிறேன்; அவர்களில் ஒவ்வொருவரும் எனது பிரியமான குமாரன் லோகோஸின் பரிசு மூலமாக இரட்சிப்படையும்படி ஒரு திட்டத்தை ஏற்படுத்துவேன். அவர்கள் பாவத்திலிருந்தும் சீரழிவிலிருந்தும் உயர்த்தப்படுவார்கள்; பாவ துன்மார்க்கத்திற்காக ஒரே பாடம் இதுவாகத்தான் இருக்கும்; இது அவர்களுக்கு என்றென்றைக்கும் தேவைப்படும். இந்த ஏற்பாடு ஆதாம் முதல் அனைவருக்கும் கிடைக்கும்படி செய்வேன்.

## தேவனுடைய அன்பின் வெளிப்பாடு

இந்த திட்டத்தின் முதலாவது அம்சம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தபோது வெளிப்பட ஆரம்பித்தது. ஆகையால் வேதவாக்கியங்கள் கூறுகிறதாவது: இயேசு "ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்." என்ன நற்செய்தியை அவர் கொண்டு வந்தார். இருதயத்தில் ஆர்வமும் உண்மையுமுள்ளவர்களாய் அவரை தேடுகிற அனைத்து மனுக்குலத்திற்கும் ஆசீர்வாதங்களை கொண்டு வந்தார்! அவருக்கு தங்கள் அன்பை வெளிப்படுத்துகிற அனைவரும் நித்திய ஜீவனை பெறும்படியான நற்செய்தியை அவர் கொண்டு வந்தார். கர்த்தருக்காக தங்கள் அன்பை விசேஷித்த விதமாக வெளிப்படுத்தின ஒரு விசேஷித்த வகுப்பாருக்கு தேவனுடைய சுதந்தரராகவும், அவரது குமாரன் இயேசு கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரராகவும் ஆகக்கூடிய நற்செய்தியை கொண்டு வந்தார். "இவ்வளவு பெரிதான இரட்சிப்பு முதலாவது நமது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டது."(2 தீமொத்தேயு 1:10; எபிரேயர் 2:3)

அனைவராலும் இச்செய்தியை கேட்க முடியவில்லை. ஏனெனில் சிலர் அதை விசுவாசியாதபடி சத்துருவானவனால் குருடாக்கப்பட்டு புத்தியில்லாதிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இது நற்செய்தியாக இராமல் முட்டாள்தனமானதாக இருக்கும். அவர்கள் கேட்பதற்கு காதில்லாதவர்கள் என்று வேதாகமம் கூறுகிறது. மற்றவர்கள கொஞ்சம் கேட்டு, நித்திய ஆக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்ள இலட்சத்தில் ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது என்று கூறுகிறார்கள். மற்றவர்கள் தங்கள் கண்களையும் காதுகளையும் அதிகமாக திறந்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் பெரும்பாலனவர்களைக் காட்டிலும் கொஞ்சம் கேட்டு அதிகமாக உணர்ந்து கொள்ளக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அப்போஸ்தலர் நமக்கு கூறுகிறதாவது: "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் விசுவாசியாதபடிக்கு அவர்கள் மனதைக் குருடாக்கினான்." (2 கொரிந்தியர் 4:4)

இயேசுவின் நாட்களை நாம் பின்னோக்கிப் பார்த்தோமானால் அவர் போதித்த போது அநேக ஜனங்கள் அவரது வார்த்தைகளை வாஞ்சையுடன் கேட்டார்கள். அவர்கள் கூறியதாவது: "இந்த மனுஷனைப் போல் யாரும் பேசினதில்லை." தேவன் அவர்களை நேசித்தார் என்று ஜனங்களிடம் கூறினார். ஜனங்கள் கூறியதாவது: வேதபாரகரும் பரிசேயரும் தங்களுக்கு செய்வதற்கு ஏதுவுமில்லை; ஆனால் இந்த மனுஷன் நம்மை நேசிக்கிறார். தேவன் நம்மை நேசிப்பதாகவும் தேவன் பரிதாபத்துக்குரிய பாவிகளாகிய நம்மை வெறுக்கவில்லை என்றும் கூறுகிறார்! "அவர் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை!"

ஆனால் அவர்களது இருதயம் சுத்தமாக இல்லாததால் அவர் சொன்ன அனைத்து காரியங்களையும் அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவர் கொண்டு வந்த செய்தியெல்லாம் கட்டுக்கதை என்று நினைத்ததால் அவர்களால் தைரியமாக நம்ப முடியவில்லை. வேதபாரகர் மற்றும் பரிசேயர்களில் யாராவது விசுவாசித்து இயேசுவின் சீஷர்களாக ஆகியிருக்கின்றனரா என்று கேட்டார்கள். அநேகர் அவரது சீஷராகவில்லை என்பதை அறிந்தபொழுது அவர்கள் கூறியதாவது: இதை தீர்மானிக்க நாங்கள் திராணியற்றவர்கள்; இவர்கள் தான் எங்கள் தலைவர்கள், நாங்கள் அவர்களை பின்பற்ற வேண்டும்.

எனினும் சிலர் இந்த காரியங்களை முழுவதுமாக ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தனர். இவர்களிடம் இயேசு கூறினதாவது: "உங்கள் கண்கள் காண்கிறதினாலும் உங்கள் காதுகள் கேட்கிறதினாலும் அவைகள் பாக்கியமுள்ளவைகள்." பிறகு இயேசு

கேட்கவும், காணவும் கூடியவர்களாக இருந்த இவர்களுக்கு தேவையான சில விசேஷித்த பாடங்களைக் கொடுத்தார். அவர்களுக்கு மாத்திரமல்ல, யுகம் முழுவதும் உள்ள ஒரு வகுப்பாருக்கும் அல்லது கூட்டத்தாருக்கும் கொடுத்தார். அவர்கள் இருதய உணர்வுகளை வெளிப்படுத்தினபடியால் அவர்கள் தம்மை பிரியப்படுத்தினார்கள் என்று கூறினார். அவர்கள் எந்த அளவுக்கு அவரை பின்பற்றி நடக்கிறார்களோ, அந்த அளவுக்கு பிதாவுடன் ஐக்கியத்திற்கு வந்து அவரது அன்பில் பங்கு பெறுகிறவர்களாவார்கள் என்று கூறினார்.

சிலர் தங்களை அர்ப்பணம் செய்வதற்கான ஆயத்தம்படுத்தும் போது இயேசு கூறியதாவது: "தேவன் தாமே உங்கள் மேல் அன்பு கூர்ந்தார்." நீங்கள் நீதிக்கான ஒரு நிலையை எடுத்தபடியினால் அவர் உங்களை நேசிக்கிறார். ஏனெனில் இந்த நீதியின் கொள்கைகளை நீங்கள் பார்த்த பொழுது அதற்கு இசைவாக நடக்க விரும்பினீர்கள். பிதாவானவர் உங்களில் அன்பு கூருகிறார். ஏனெனில் நீங்கள் கஷ்டமான வழியாகிய இடுக்கமான வழியில் நடக்க விரும்புகிறீர்கள். விசாலமான இன்னொரு வழி மரணத்திற்கும் அழிவிற்கும் வழி நடத்துகிறது. என் அன்பான சீஷர்களே, நான் உங்களுக்கு காண்பிக்கிற வழி இந்த இடுக்கமான வழி, ஜீவனுக்கு போகிற வழியாகும், நீங்கள் என்னுடைய சீஷர்களாயிருக்கும்படிக்கு அது பெரிய செயலை நடப்பிக்கும். ஆனால் பிதாவானவர் உங்களை நேசிப்பார். நானும் உங்களை நேசிப்பேன். நாங்களே உங்களிடத்தில் வெளிப்படுத்துவோம். துன்பங்களையும் சோதனைகளையும் நீங்கள் பெற்றாலும், உங்கள் இருதயங்களில் தேவ சமாதானம் உண்டாயிருக்கும். பிறகு சீஷர்கள், அவரை பின்பற்ற அனைத்தையும் விட்டுவிடுவோம் என்று கூறினார்கள்.

## தேவனுடைய அன்பிலே நம்மை காத்துக்கொள்வது எப்படி

"தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்" என்று அப்போஸ்தலர் யூதா அறிவுறுத்துகிறார். இங்கே உலக நிலைமையிலிருந்து தேவனுடைய இந்த விசேஷித்த அன்பிற்குள் வந்தவர்களுக்கு அப்போஸ்தலர் கூறுகிறார். அவர்களை தேவன் தம்முடைய குடும்பத்துக்குள் தமது பிள்ளைகளாக தத்தெடுத்து கொண்டு வந்திருக்கிறார். நாம் பெரிய மற்றும் ஆச்சரியமான காரியங்களை செய்வதினால் தேவன் நம்மை நேசிக்கவில்லை. அவர் நம்மை ஜெநிப்பித்த போது, நமக்கான அவரது விசேஷித்த அன்பு ஆரம்பமானது. ஏனெனில் நாம் அர்ப்பணம் செய்திருந்தோம்; நாம் பலியின் உடன்படிக்கைக்குள் நுழைந்திருந்தோம். அவரது ஆவியினால் முத்திரை போடப்பட விரும்புகிறவர்களிடத்திலும் அவரது பிள்ளைகளாக ஆக விரும்புகிறவர்களிடத்திலும் பிதாவானவர் சந்தோஷப்படுகிறவராக இருக்கிறார். இப்படியாக கிறிஸ்துவில் குழந்தைகளாக நம்மிடத்தில் அன்பு செலுத்த ஆரம்பித்தார். நாம் வளர்ந்து பலமடைவதால் நம்மை நேசிக்கிறார். கடைசி வரை நம்மை நேசிப்பார்.

நம்மிடத்தில் வளர்ச்சி இருக்கின்றது என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். நாம் முதலில் குழந்தைகளாக இருந்து, பிறகு பிள்ளைகளாகி, பிறகு வாலிபர்களாகி, பிறகு இன்னும் முழுமையாக வளர்ச்சியடைகிறோம். பரலோக பிதாவானவரின் குணலட்சணத்தை பரப்புகிற நீதியின் கொள்கைகளை நாம் கற்றுக்கொள்ளுவதால் நாம் இவைகளில் களிகூர வேண்டும். நமது மனதிற்கு முன்பாக வேறு எந்த திட்ட அளவுகளும் இல்லை. அது தான் நமது பிதாவானவரின் அறிவுரை, நமது பிதாவானவரின் திட்ட அளவு என்று நாம் கூற வேண்டும். ஆகையால் நாம் அதிகமதிகமாக மறுரூபமடைவோம். பரலோக பிதாவானவரின் திட்ட அளவைத் தவிர மற்றவைகள் எல்லாம் நமக்கு மென்மேலும் பிடிக்காதவைகளாக ஆகின்றன.

நாம் தொடர்ந்து பயணிக்கும் போது, தேவனுடைய அன்பில் நம்மை காத்துக்கொள்ள வேண்டும். நாம் குழந்தைகளாக அவரது அன்பில் காத்துக்கொள்ளுவது அவசியமாக இருக்கிறது. குழந்தைகளாக அது அவசியமாகிறது. இன்னும் மேலும் வளர்ச்சியடையும் போது அது அவசியமாக இருக்கிறது. இதை எப்படி நாம் செய்யக்கூடும் ? அவரது பிரமாணங்களை கைக்கொள்ளுவதினாலேயே. இப்படியாக நமது சரீரத்தை கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பரிபூரண சித்தத்துக்கு கீழ்ப்படுத்துகிறோம். இதை செய்கிற ஒவ்வொருவரும் தாங்கள் வளர்வதை காண்பார்கள். ஒவ்வொரு நாளும் நாம் வளர்ந்து பெருகி, அதிகமதிகமாக தேவனைப்போல் ஆக வேண்டும். ஆகையால் நாட்கள் செல்லச்செல்ல நாம் அதிகமதிகமாக மறுரூபடைகிறோம். இப்படியாக அவரது அன்பில் நம்மை காத்துக்கொள்ள வேண்டும்.

ஆனால் நமது ஓட்டத்தில் எப்பொழுதாவது இந்த குணங்களை வளர்க்க விட்டுவிடவும் நிறுத்தவும் செய்தால், தேவனுக்கு கீழ்ப்படிவதை நிறுத்தினால், பிறகு அவரது அன்பிலிருந்து மென்மேலும் நிறுத்தப்பட்டு முடிவாக அவரது அன்பிலிருந்து முற்றிலுமாக நீக்கப்படுவோம். பிறகு சாபமும் தேவனுடைய கோபமும் நம்மில் வந்தடையும். இப்படியாக நாம் முன்னிருந்த நிலைமையைக் காட்டிலும் மோசமாக இருப்போம். ஏனெனில் இரண்டாவது நிலைமை அறிவை அடைந்த நிலைமை, ஆனால் முதலாவது நிலைமை அறியாமை மற்றும் பரம்பரை பலவீனம். இந்த மோசமான நிலைமையில் தேவன் நமக்கு இரக்கமே காண்பிக்கமாட்டார்.

எதிர்காலத்தில் உலகமானது தேவனுடைய கிருபையைக் குறித்த முழு அறிவுக்கும் சந்தர்ப்பத்திற்கும் கொண்டு வரப்பட்டு தேவனைப் பற்றியும் அவரது நீதியைக் குறித்தும் புரிந்து கொள்ள வரும்போதும் இப்படியே ஆகும். அவர்கள் தேவனுடன் இசைவிற்கு வராதிருந்தால் அவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப்படுவார்கள். (1 தீமோத்தேயு 2:4; அப்போஸ்தலர் 3:22, 23)

## நமது உயர்ந்த நோக்கம்

நமது கர்த்தர் கூறியதாவது: "ஒன்றான மெய் தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்." தேவனுக்கான நமது அன்பும், நமக்கான தேவனுடைய அன்பும் இரண்டு வெவ்வேறான காரியமாக இருக்கிறது. நாம் தேவனை நேசிக்கிறதற்கு முன்னதாகவே நாம் அவரிடம் பயபக்தியாய் இருக்கிறோம். அவரை நேசிப்பதற்கு, நாம் முதலில் அவரை அதிகமாக அறியாதிருந்தோம். நாம் மிகவும் குறைவான பலம் உள்ளவர்கள் என்பதையும், சத்துருவானவன் நம்மை எப்பக்கத்திலும் சுற்றிக் கொண்டிருக்கிறான் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். ஆகையால் நாம் தேவனிடத்தில் பக்தியுடனான பயத்தை பெற்றிருக்க வேண்டும் என்பதே ஞானத்தின் ஆரம்பமாக இருக்கிறது.

நாம் தேவனைக் குறித்து அதிகமதிகமாக அறிய வருவதால் அவர் எந்த சிருஷ்டியையும் துன்பப்படுத்த விரும்புகிறவர் அல்ல என்பதைக் காண்கிறோம். நாம் தேவனைக் குறித்த அறிவில் வளரும் போது, அதற்கேற்றாற் போல் அவருக்கான அன்பில் நாம் வளருகிறோம். அவர் நம்மேல் எவ்வளவு அன்பு செலுத்துகிறார் என்ற அறிவில் நாம் வளருகிறோம். முதலில் நாம் இதை அறியாதிருந்தோம். தேவனுடைய ஆவியை பெற்றவர்களைத் தவிர வேறு யாருக்கும் அவர் தம்மை வெளிப்படுத்த விரும்புவதில்லை. ஆகையால் நம் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய உயர்ந்த நோக்கம் என்னவென்றால், அவரை அறிவதும், அவரது ஆச்சரியமான அன்பையும் அவரது ஆச்சரியமான சமாதானத்தை அறிவதும் ஆகும். ஏனெனில் இந்த அறிவு நம்மை தேவனிடத்தில் மிக அருகாமையில் இழுக்கிறது. அப்போஸ்தலர் யூதா கூறுவது போல, தேவனுடைய அன்பிலே தொடர்ந்து நம்மை காத்துக்கொள்ள வேண்டும்.

தேவனைப் பற்றிய முழு அறிவிற்குள் வருகிறவர்களை அவரது வசனத்தை புரிந்துணர வேண்டும். அவரை நேசிக்கும்படியாகவும் அவரது திட்டத்தை புரிந்துணரும் படியாகவும் இந்த திசையில் கீழ்ப்படிதலை பின்பற்ற வேண்டும். அன்பு, புரிந்துணர்தல், கீழ்ப்படிவதற்கான விருப்பம் இவையனைத்தும், கர்த்தர் நமக்கு முன் வைத்திருக்கிற இலக்கிற்கு உயர்ந்து முன்னேற வழி நடத்தும்.

### தேவனுடைய அன்பை எது அமைக்கிறது

வேதாகமத்தைப் பற்றி பேசும் போதும், தேவனுடைய செய்தியின் அர்த்தத்தை கூறும் போதும், தேவனுடைய வசனத்தின் கூற்று சில சமயங்களில் பயன்படுத்தப் -படுகிறது. தேவனிடமிருந்து வருகிற ஒவ்வொரு நன்மை மற்றும் ஒவ்வொரு பூரண ஈவும் நம்மை அவரிடத்தில் விசுவாசமாக இருக்க உதவுகிறது. நமக்கு ஜீவனை கொடுத்திருக்கிறவரின் வசனத்தை நாம் கவனிக்க வேண்டும், அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பது மிகவும் நியாயமானது. சிலர் தன் சித்தம் போல் இருக்க விரும்புகிறார்கள். சிலர் மனிதர்களில் வார்த்தையின்படி மனிதனின் போதனையின்படி நடக்க விரும்புகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு போதுமான கவனம் செலுத்தமாட்டார்கள்.

தேவனுடைய வார்த்தை உயர்ந்த நிலையில் இருக்கிறது. அவரது ஜனங்கள் அனைவரும் அதற்கேற்றபடி தங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். தேவனுடைய திட்டத்தைக் குறித்து நமக்கு சில கருத்து இருக்கலாம். ஆனால் தேவனுடைய சித்தத்தைக் குறித்து மற்றவர்கள் சில கருத்துக்களை உடையவர்களாக இருக்கலாம். ஆனால் எந்த கருத்தாக இருந்தாலும் அது தேவனுடைய வசனத்தின் வெளிச்சத்திற்கு கீழாக வர வேண்டும். முதலாவது நாம் தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம் உண்மையாகவே நல்ல சான்றோடு ஆதரிக்கப்படுகிறது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பிறகு, அதன் பல்வேறு பகுதிகள் இடைச்செருகல் அல்லது சேர்க்கைகள் இல்லாமல் தேவனுடைய வார்த்தை சுத்தமாக இருக்கிறதா என்பதை கவனிக்க வேண்டும். தேவனுடைய வசனத்தை கண்ட பிறகு அதை கடைபிடிக்க வேண்டும், அதாவது அதை கனப்படுத்தி அதற்கு கீழ்ப்படிய வேண்டும். நமது வாழ்க்கையை அதற்கு ஏற்றாற்போல் ஒழுங்குப்படுத்த முயற்சிக்க வேண்டும். நமது செய்கைகள் எல்லாம் அந்த வசனத்தின்படி இருக்க வேண்டும். தேவனுடைய வசனத்தை கடைபிடிப்பதின் பலனாக கடைபிடிப்பவர்கள் தேவனுடைய அன்பு அவர்களில் பூரணமாக இருப்பதை காண்பார்கள். (1யோவான் 2:5)

பிறகு தேவனுடைய அன்பு என்றால் என்ன என்ற கேள்வி எழுகிறது. அது எந்த அர்த்தத்தில் நம்மில் பூரணப்படுத்தப்பட முடியும்? அன்பானது தேவனிடத்தில் பூரணமாக இருக்கிறது என்று அப்போஸ்தலர் யோவான் வெளிப்படையாக குறிப்பிடுகிறார். அந்த அன்பு பரிசுத்தமானதாகவும், சுயநலம் மற்றும் கறைகள் அற்றதாக இருக்கிறது என்றும், தேவனுடைய அன்பு சரியான கொள்கையும் அவரது குணலட்சணத்தின் அடிப்படையான கொள்கையை உடையதாகவும் இருக்கிறது என்றும் கூறுகிறார். தேவனுடைய வசனத்தை கைக்கொள்ளுகிறவர்கள், அனைவரும் அவர் பெற்றிருக்கிற அதே அன்பை உடையவர்களாக இருக்க வேண்டும்.

ஆரம்பத்தில் நாம் கடமை அன்பு உடையவர்களாக இருந்தோம். தேவன் நமக்கு மகத்தான காரியங்களை செய்திருந்தார். அதற்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். அந்த விஷயத்தில் நமது கடமை இன்னும் பாக்கியிருக்கிறது. நாம் தேவனை நேசித்தோம். ஏனெனில் அவரை நேசிக்கிறவர்களுக்கு அவர் தமது கிருபையை அளிப்பதாக குறிப்பிட்டிருக்கிறார். ஆகையால் கொஞ்ச காலத்திற்கு அன்பு கொஞ்சம் சுயநலம் உடையதாக இருக்கிறது. ஆனால் இந்த தேவனுடைய பரிபூரண அன்பை பெற்றிருக்க முடியும் என்று நாம் நம்புகிறோம். தேவைப்படுவது மாம்சத்தின் பரிபூரண கிரியையாக இருக்குமானால் பூரணத்தை பெறுவதற்கான நமது திறமையை நாம் சந்தேகப்படுவோம். ஆனால் அது இருதயத்தின் காரியமாக இருக்கிறபடியினால் அதை நாம் அடைவது சாத்தியமானதாக இருக்கிறது; ஏனெனில் இருதயத்தில் நாம் பரிசுத்தமாயிருக்க முடியும். ஆகையால் நமது இருதயம் அதிகமதிகமாக சுயநலம் மற்றும் பாவத்திலிருந்து விலகியிருக்குமானால் இந்த சரியான உயர்ந்த அன்பு நம்மால் புரிந்துணரப்பட்டு நம்மில் பூரண மடையும். நமது மனங்கள் இந்த அன்பின் செல்வாக்கை உடையதாக இருக்கும். நமது அனைத்து நடத்தைகள், சிந்தைகள், அதே ஒழுங்குக்காக கீழாக வரும்.

பிறகு, நம்மில் தேவன் பூரணப்படுத்திய அன்பை பெற்றிருப்பது, நாம் மிகவும் உயர்ந்த, சிறந்த அன்பை பெற்றிருப்பதாகக் காணப்படும். அதாவது தேவன் நேசிப்பது போல நாம் நேசிப்போம். நாம் நமது அண்டை வீட்டாரை நேசிக்கிறோம். அதாவது அவன் நாம் சந்தோஷத்துடன் மதிக்கக்கூடிய சில உரிமைகளை பெற்றிருக்கிறான் என்று நாம் உணருகிறோம். எந்த விதத்திலும் அவனது முன்னேற்றத்துக்கு தடையில்லாதபடி நமது அண்டை வீட்டாருக்கு நாம் உதவுவோம். தேவன் பொறாமையுடைய, வெறுக்கத்தக்க தேவனல்ல; ஆனால் அன்பான தேவன்; தேவன் உண்மையுள்ள தேவன்; நமது மதக்கோட்பாட்டில் வைக்கப்பட்டுள்ள ஒருவரல்ல.

தேவனுடைய வசனத்தை நாம் உண்மையாக மதிப்பதால், அது நமக்கு தேவையான போதனையையும் வழிகாட்டுதலையும் தருகிறது. எல்லா பாவமும் சுயநலமுடையதாக இருக்கிறது, அனைத்து சுயநலமும் பாவமாக இருக்கிறது. தேவனுடைய பிள்ளை தேவனுடைய குணலட்சணத்தை மிகவும் தெளிவாக காண வருகிற படியால், மேலும் அவன் தேவனைப் பற்றி போதிக்கப்பட விரும்பகிறபடியால் அவன் தேவனுடைய ஆவியின் செல்வாக்கின் கீழாக வருவான். மேலும் அவன் வசனத்தை ஆராய்ந்து அதில் தெளிவான நுண்ணறிவைப் பெறுகிறான். இப்படியாக நாம் தேவனுடைய அறிவில் வளருகிறோம். இது ஒரு தொடர்ந்து முன்னேறுகிற காரியம். தேவன், அவருடைய அறிவுள்ள சிருஷ்டிகள் அவரது வசனத்தின் ஆவியினால், அன்பின் ஆவியினால் உயிரூட்டப்படவேண்டும் என்று விரும்புகிறார்.

## அன்பு விசுவாசத்தை அடிப்படையாக கொண்டது

மேலே விளக்கப்பட்ட அன்பானது அறியாமையின் அடிப்படையிலானது அல்ல என்று நாம் காண்கிறோம். மாறாக அது தேவனைப் பற்றிய தெளிவான அறிவின் அடிப்படையிலானதாக, அவர் கூறியிருக்கிறதை, முழுவதுமாக புரிந்துணர்ந்து கொண்ட பிரிக்க முடியாத விசுவாசத்தின் அடிப்படையிலானதாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒருவர் ஒரு வகையான அன்பை தேவனிடத்தில் கொண்டிருக்கலாம். காலப்போக்கில் தேவனுடைய குணலட்சணத்தை தெளிவாக அறியும் போது இப்படிப்பட்ட அன்பு ஆட்டங்காணலாம். தேவனுடைய நோக்கம் அவரது ஏற்பாடுகளை மனுக்குலம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதாகும். பிறகு அவர்கள் அவரது குணலட்சணத்தை உண்மையாக மதித்தால் பிரிக்க முடியாத விசுவாசத்தையும் அவரது திட்டத்தின் அனைத்து அம்சங்களையும் உண்மையாக மதிக்கக்கூடிய அன்பையும் பெற்றிருப்பார்கள்.

நமது அனுபவத்தில் தேவன் அவரைப் பற்றிய போதனைகளை கொடுக்கிறார் என்பதை நாம் அனைவரும் காண்கிறோம். நாம் அவரை அறிய வருவதினால் அதனிமித்தம் அவரை நேசிப்பதினால் அதற்கேற்றாற்போல் பிரிக்கமுடியாத இந்த விசுவாசத்தை நாம் பெறுகிறோம். இது தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்தைப் பற்றிய அடிப்படையிலான ஒரு விசுவாசமாகும். ஒரு தேவதூதன் கூட விசுவாசத்தை பெற்றிருப்பதாக கூறலாம். அது மிகவும் வட்டமான விசுவாசம். "பிதாவை தொழுதுகொள்ளுகிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார்." தேவனுடைய அறிவுள்ள சிருஷ்டிகள் எல்லாம் பிரிக்க முடியாத விசுவாச நிலைப்பாட்டின்படி தொழுதுகொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். இந்த விசுவாசமானது நேர்மையானது, மிகவும் வட்டமானது, ஒன்றொன்று பின்னப்பட்ட ஒரு சீரான விசுவாசமாகும். ஆகையால் எல்லா மனுஷரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும் என்று விரும்புகிறார். (1தீமோத்தேயு 2:4)

நாம் முதலாவது நாம் பெற்றிருக்கிற சத்தியத்தை பயன்படுத்த வேண்டும் என்பதும் இப்படியாக அதிக மதிப்புயர்வை பெறுவோம் என்பதும் தேவனுடைய ஏற்பாடாக இருக்கிறது. சபையைத் தவிர யாருமே வட்டமான அறிவை இன்னும் பெறவில்லை. நாமும் முழு அறிவைப் பெறவில்லை. ஆனால் சத்தியத்தை மதிக்கக் கூடிய அளவுக்கு நாம் அனைவரும் வந்திருப்பது தேவனுடைய சித்தமே. அது வெறும் அறிவு மட்டுமல்ல, நாம் அதை அதிகமாக மதிக்கக்கூடிய அளவுக்கு முழுமையாக அதற்குள் செல்வது ஆகும். "அவர்கள் உம்மை அறிவதே நித்திய ஜீவன்." அதாவது நாம் கர்த்தருடன் தனிப்பட்ட முறையிலும் நெருக்கமாகவும் அறிமுகமாக வேண்டும். இதைச் செய்ய நாம் கிருபையிலும் அறிவிலும் வளர்ந்து அவரது அன்பை அறிந்து இந்த ஞானத்தை அப்பியாசப்படுத்துவது அவசியமாயிருக்கிறது.

அடுத்த யுகத்திலும் இதுவே நடைமுறைக்கு உகந்ததாக இருக்கும். தேவனுடைய குணலட்சணத்தை முழுமையாகவும் தெளிவாகவும் மதிக்கக்கூடிய அளவுக்கு மனுக்குலத்தை கொண்டு வருவதே கிறிஸ்துவின் ராஜ்யத்தின் இலக்கு. இதை அடைந்து, தேவனுடைய குணலட்சணத்தை அனுதாபத்துடன் அனுபவிக்கிறவர்கள், அவரில் குறிப்பிடப்படுகிற நீதி, அன்பு மற்றும் இரக்கத்தின் கொள்கைகளை மதிப்பார்கள். தனது சொந்த இருதயத்தில் இந்த பண்புகளை மதிக்கிறவர்களே தேவனிலும் அவைகளை மதிப்பார்கள். இதை மதிப்பவர்கள் மட்டுமே நித்திய ஜீவனை பெறுவார்கள். ஆயிரம் வருட யுகம் முழுவதும் இதை அனுபவிப்பவர்களில் தேவனால் நித்திய ஜீவனை கொடுக்க முடியாத வகுப்பினரும் இருப்பார்கள்.

## பிரமாணத்தின் முடிவு அன்பு

வெறும் விசுவாசம் மட்டுமோ, வட்டமான விசுவாச மட்டுமோ அல்ல, இருதயத்தில் சுத்தமான அன்பும் வேண்டும். பரிசுத்தமான இருதயம் இல்லாமல் வட்டமான விசுவாசத்தை நம்மால் பெற முடியாது. பரிசுத்தமான இருதயம் என்பது முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட இருதயம். கர்த்தருடைய சித்தத்திற்கு முழுமையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட இருதயம். கர்த்தருடைய வழியில் நுழைந்து, முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு முன்பதாக இந்த நிலைமை அத்தியாவசியமானது. அன்பும் பரிசுத்தமான இருதயமும் இல்லாமல் தேவன் நம்மை ஏற்றுக்கொள்ளவே மாட்டார். இதைக் காட்டிலும் அதிகமாக தேவைப்படுகிறது. இதை நாம் நல்ல மனசாட்சியுடன் பராமரிக்க வேண்டும். நமது மனசாட்சியானது இப்படியாக சொல்ல வேண்டும்: "சரியானதைப் பற்றிய விருப்பத்தை மட்டுமல்ல, நல்ல முயற்சியையும் கொண்டிருக்கிறேன்." "நான் சரியானதைச் செய்தேன்" என்று மட்டும் கூறாமல், நமது மனசாட்சியானது, "என்னால் முடிந்த சிறப்பானதைச் செய்தேன்" என்று சொல்ல வேண்டும். இதற்கு குறைவானது எதுவும் தேவனை சந்தோஷப்படுத்தாது.

ஆகையால் முடிவாக தெய்வீக பிரமாணத்தின் நோக்கம், இந்த அன்பை நம்மில் அபிவிருத்தி செய்வதாகும். கர்த்தருக்காக முழுவதும் அர்ப்பணிக்கப்-பட்ட அன்பு, அவருடையதைப் போன்ற அன்பு, இது நல்ல மனசாட்சியுடனும் பிரிக்க முடியாத விசுவாசத்துடன் இணக்கமாக இருக்கும் அன்பு. இந்த விசுவாசம் தேவனுடைய வசனத்தின் போதனைகளில் நன்றாக நிர்மாணிக்கப்பட்ட விசுவாசம். இது தேவனுடைய சித்தத்தை அறிய ஆவலாக இருக்கக்கூடிய ஒன்று. இது வேதவாக்கியங்களை ஆராய்ந்து தேவனுடைய பிரமாணத்தில் சந்தோஷப்படுகிறதாய் இருக்கிறது. இது சங்கீதக்காரனைப் போல, "என் தேவனே, உமது சித்தத்தின்படி செய்ய பிரியமாயிருக்கிறேன்" என்று சொல்லக்கூடியதாக இருக்கிறது.

நீதியின் கொள்கையை பகுத்துணர்ந்து சொல்லக் கூடியது: "ஒருவர் சொல்லக்கூடிய நியமம் ஒன்று இருக்கிறது." இன்னொருவர் அன்பைப் பார்த்து சொல்லக்கூடியது : " சிறந்த நியமம் அங்கே இருக்கிறது. இது மகா பெரியது இல்லையா? நான் இதை முழுவதுமாக உறுதிப்படுத்த விரும்புகிறேன்." மூன்றாமவர் பூரணமே தெய்வீக பிரமாணத்தின் நியமம் என்று அங்கீகரித்து, தேவனுடைய சித்தத்தை செய்ய அர்ப்பணம் செய்து கூறுகிறதாவது: "தேவனே, உமது வேதம் என் மனமகிழ்ச்சி," தேவனுடைய நீதியில் மனமகிழ்ச்சியாக இருக்கும் ஒருவன், தேவனுடைய அன்பில் மனமகிழ்ச்சியாக இருக்கிறான். எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக்கூடாது என்பதைக் காட்டிலும் அதிகமாக அவன் காண்கிறான். அவன் காரியங்களை தேவனுடைய கருத்தில் காண்கிறான். அவன் பிரபஞ்சத்தை ஆளுகிற தேவனுடைய குணலட்சண கொள்கைகளை பார்க்கிறான். நித்திய ஜீவனை உயர்வாக மதிக்க வருகிற ஒவ்வொருவரும் காரியங்களை அன்பின் கருத்தில் நோக்கி கற்றுக்கொள்ள வேண்டும்.

R5284

## WHY THERE IS DIVERSITY AMONGST GOD'S PEOPLE

# தேவனுடைய ஜனங்களிடையே ஏன் வேற்றுமை இருக்கிறது

"உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது?"– 1கொரிந்தியர் 4:7

அனைத்து மனிதர்களும் மாற்ற முடியாத உரிமைகள் மற்றும் சலுகைகளுடன் பிறந்திருப்பது உண்மையாயிருந்தாலும், பாவமில்லாமல் யாரும் பிறப்பதில்லை. ஆறாயிரம் வருடங்களுக்கு முன்னதாக மனித இனம் ஆதாமில் பாவத்துக்கு கீழாக விற்கப்பட்டதை வேத வாக்கியங்கள் மிகவும் சரியாக அறிவிக்கிறது. இந்த அர்த்தத்தில் நாம் சுதந்தரமாக பிறக்காமல் பாவத்தின் அடிமைகளாக பிறந்தோம். சமமாகவும் நாம் பிறக்கவில்லை. இரண்டு நபர்கள் சந்தர்ப்பம், திறமை, சமார்த்தியம் ஆகியவைகளில் சமமாக இருப்பதில்லை. நாம் ஒருவருக்கொருவர் வேறுபடுகிறோம். தேவன் சிலரை மேன்மையாகவும், சிலரை மோசமாகவும், சிலரை அதிக செல்வந்தராகவும் சிலரை குறைந்த செல்வந்தராகவும் உண்டாக்கவில்லை. மனுக்குலத்தின் ஆரம்பத்தை வேதாகம அறிக்கையிலிருந்து எடுத்துக்கொண்டு, தேவன் ஆதாமை பூரணராக உண்டாக்கினார் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனித இனத்திற்கு தடையை உண்டாக்கின அனைத்து அபூரணங்களும் மரிக்கும் செயல்பாடுகளின் பலன்களாகும். நாம் ஆதியிலே உண்டாக்கப்பட்ட தேவரூபம் மற்றும் தேவ சாயலிலிருந்து பாவமானது நம் அனைவரையும் வேறுபடுத்திவிட்டது. சாத்தான் இந்த வேறுபாடுகளை தாய் ஏவாள் மூலம் கொண்டுவந்தான்.

நமது தலைப்பு வசனத்தில் அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி என்கிற ஒரு புது அமைப்பை மனதில் கொண்டிருக்கிறார். அவர்களிடையேயும் வேறுபாடுகள் உள்ளன. சபையில் சிலருக்கு அநேக திறமைகள் உள்ளன. மற்றவர்கள் குறைவான திறமையை பெற்றிக்கிறார்கள். சிலர் விசேஷித்த திறமைகளை பெற்றிருக்கிறார்கள். மற்றவர்கள் குறைவான திறமைகளை உடையவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகமான அல்லது குறைவான திறமைகளை கொடுக்கப்படுவதற்காக சாத்தான் குற்றம் சாட்டப்படவில்லை. தேவன் தமது சித்தத்தின்படி அவயங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். வெவ்வேறு அவயங்களை சரீரத்தில் வைப்பதும் வெவ்வேறு வகையான கனிகளை கொண்டு வருவதும் நமது இருதயங்களில் தேவனுடைய கிருபையின் வெளிப்பாடுகளாக இருக்கின்றன. இப்படியாக நாம் ஒருவருக்கொருவர் வேறுபடுத்தப்பட்டுள்ளோம்.

### வேற்றுமை அடைவதற்கான காரணம்

பரிசுத்த ஆவியில் வளருகிற காரியம் தேவனுடைய சித்தத்தை அறிவதிலும் செய்வதிலும் ஒவ்வொருவருக்கும் இருக்கக்கூடிய வைராக்கியத்தை பெரும்பாலும் சார்ந்திருக்கிறது. கிறிஸ்துவின் பள்ளியில் நாம் அவரை அறிந்து கொள்ளுவற்காக வைக்கப்பட்டுள்ளோம். சிலர் அதிக வேகமாக கற்றுக்கொள்ளுகிறார்கள், மற்றவர்கள் குறைவான வேகத்தில் கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் கற்றுக்கொள்ளுகிறதற்கு தக்கதாக அவர்கள் அதிகமான சந்தர்ப்பங்களையும் ஆசீர்வாதங்களையும் பெறுகிறார்கள். அனைவரும் ஓர் அளவுக்கான பரிசுத்த ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்; அனைவரும் சில ஆசீர்வாதங்களை கொடுக்கப் பெற்றிருக்கிறார்கள். கர்த்தருடைய சித்தத்தை அறிய மிகவும் ஆவல் உள்ளவர்களாயிருந்து ஆராயும் போது அவர்கள் மிகவும் வேகமாக வளருகிறார்கள். இப்படியாக பரிசுத்த ஆவியை அதிகமாக பெறுகிறார்கள். இவர்கள் கர்த்தருடைய சித்தத்தில் மிகவும் வைராக்கியம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள். அவர்களது முன்னேற்றத்திற்கு அவர்களே முழுவதுமாக காரணமாக இருப்பதில்லை. ஆனால் தேவனுடைய கிருபையும் காரணமாயிருக்கிறது.

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: நீங்கள் தேவனுடைய செய்கையாயிருக்கிறீர்கள். "தேவனே தம்முயை தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்." இந்த வேலையை நாமே செய்ய முடியாது. நம்மில் கிரியை செய்கிற சக்தி தேவனுடையது. அவர் ஒரு மகிமையான ஆலயத்தை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். யார் இந்த ஆலயத்துக்கு பிரதான மூலைக்கல்லாக இருப்பார் என்பதையும் யார் ஆலய வகுப்பாராக இருப்பார் என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். நாமே அந்த இடத்தை தேர்ந்தெடுக்க முடியாது. ஆனால் தேவனுடைய கிருபையினால் நாம் ஒவ்வொருவரும் ஒரு ஜீவனுள்ள கல்லாக இருப்பதற்கான அழைப்பிற்கு நாம் செவி கொடுத்துள்ளோம். கற்களானது முதலாவது இருளான கல் சுரங்கத்திலிருந்து வெட்டப்பட்டன. தற்போது அவைகள் மகிமையான கட்டடத்தில் இடங்களுக்காக உருவேற்படுத்தி தயார்படுத்தப்படுகின்றன.

### இன்னொரு வகையான வேற்றுமை

மகா பெரிய தொழிலாளி நம்மில் கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிறார். அவர் நம்மை செதுக்கி உருவாக்குகிறார். நாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி நம்மை செய்கிறார். அங்கு பெருமை பேசுவதற்கு ஒன்றுமில்லை. ஓர் அளவான குணநலம் ஒவ்வொருவருடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. எனினும் அங்கு அதிகப்படியான குறுக்கு ஓட்டம் காணப்பட்டால் அது ஒதுக்கப்படும். அப்போஸ்தலர் பேதுரு கூறுவது போல் ஏற்ற காலத்தில் தேவன் நம்மை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க வேண்டும். நாம் பெற்றிருக்கிற அனைத்திற்காகவும் நாம் தேவனை நோக்கவும் மகிமைப்படுத்தவும் வேண்டும் என்று அதே அப்போஸ்தலர் நமக்கு ஞாபகப்படுத்துகிறார். (1பேதுரு 5:6; 4:1)

நாம் தேவனுடன் உடன் வேலையாட்கள். நாம் முன்னிருந்ததைக் காட்டிலும் இப்போது தேவன் நம்மை வேறுபடுத்துவதால், நாம் அவரை போற்ற வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தை செய்ய நாடுவதால் நாட்கள் செல்லச் செல்ல தொடர்ந்து நம்மில் அவர் கிரியை நடப்பித்து ஒவ்வொரு நாளும் நாம் இப்படியாக வேறுபடும்படி செய்கிறார். நாமாக எதையும் பெற்றிருக்கிறோமா? ஒன்றுமேயில்லை! நமது தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் நாம் முழுவதுமாக மரித்த நிலையிலிருந்தோம். நித்திய ஜீவனுக்கு உரிமையற்றவர்களாய் இந்த நிலைமையில் நாம் பிறந்தோம். ஆனால் தேவன் உலகளாவிய ஆசீர்வாதத்திற்கு ஒரு திட்டத்தை வைத்திருக்கிறார். இந்த திட்டத்தில் நமக்கு அதிக லாபம் தரக்கூடிய உயர்ந்த அம்சங்களை வைத்திருக்கிறார். அவர் நம்மை உலகத்தார் வருவதற்கு முன்னே வரும்படி அழைத்திருக்கிறார். இதை நாம் அவரது கிருபையினால் பெறுகிறோம்.

R5284

## DOCTRINES MORE OR LESS IMPORTANT

# உபதேசங்கள் ஏறக்குறைய முக்கியமானது

கிறிஸ்துவின் உபதேசங்களில் உறுதியான அம்சங்கள் இருக்கின்றன. அவை இன்றியமையாததும், அடிப்படையானதுமாக இருக்கின்றன. அது இல்லாமல் யாரும் கர்த்தருடைய சீஷர்களாக அங்கீகரிக்கப்பட -மாட்டார்கள். வேறு சில அம்சங்கள் இருக்கின்றன. அவை பயனுள்ளதாகவும், உதவிகரமானதாகவும், ஆசீர்வாதத்திற்குரியதாகவும் இருக்கின்றன. அவை அடிப்படையானவையல்ல, கிறிஸ்துவின் சரீர அங்கத்திற்கு அத்தியாவசியமானதும் அல்ல. அடிப்படையானவை பெந்தெகொஸ்தே நாளிலிருந்து இன்றைய காலம் வரை நல்ல, பரிசுத்தவான்களால் அனுபவிக்கப்பட்டு வருகிறது.

நாம் இப்பொழுது அதே வகுப்பாராக, அதே அடிப்படையானவைகளை பெற்றிருக்கிறோம். நாம் பலப்படுத்தப்படுவதற்காக மற்ற சலுகைகளும் சத்தியங்களும், "ஏற்ற காலம் போஜனமும்" அனுமதிக்கப் -பட்டிருக்கிறன. இந்த பின்னானவைகள் நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கங்களாவதற்கு அத்தியாவசியமானவைகள் அல்ல. இல்லையென்றால் நமது முற்பிதாக்கள் கிறிஸ்துவின் சரீர அங்கங்களாகி -யிருக்க முடியாது. அநேக நூற்றாண்டுகளாக கிறிஸ்துவின் சரீரமே இல்லாதிருந்திருக்கும்.

பாவ நிவாரணத்தின் அடிப்படை கோட்பாடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஆதாமுடைய பிள்ளைகளாகிய சகல மனிதர்களும் பாவிகள்.

2. ஒரு இரட்சகரின் பலியில்லாமல் யாரும் தேவனுடன் ஒப்புரவாக முடியாது.

3. அந்த பலியாக இருக்கும்படியும் பின்னர் அதை உலகத்தின் பாவங்களுக்காக மீட்கும் பொருளாக அப்பியாசப்படுத்தும்படியும் இயேசு உலகத்திற்கு வந்தார்.

4. இரட்சகரின் வேலையில் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில், "உங்கள் சரீரங்களை ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள்" என்கிற தெய்வீக அழைப்பை ஏற்றுக்கொண்டு, விசுவாசியானவன் தெய்வீக ஊழியத்துக்கு தன்னை அர்ப்பணம் பண்ணலாம்.

5. இப்படி செய்து, விசுவாசியானவன் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் தொகை நிறைவாகும் வரைக்கும். தனது பலி பிதாவானவருக்கு பிரியமாயிருக்கும்படி உறுதியான முழுமையான விசுவாசத்துடன் அப்பியாசப்படுத்த வேண்டும். பிறகு அவன் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் பங்கை, ஜெனிப்பித்தலின் பங்கைபெறுவான்.

6. இந்த நிபந்தனைகளை சந்திப்பவர்கள் சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதுவே எப்பொழுமே தேவையானதாக தெரிகிறது. இதற்கு மேலானது எதுவும் தற்காலத்தில் அவசியமற்றதாக இருக்கிறது என்று நாம் விசுவாசிக்கிறோம். நமது சாதகமான நாளினிமித்தம், நாம் அதிக அறிவை பெற்றிருக்கிறோம். நமது அதிகமாக அறிவை ஈடுகட்டும்படியாக அதற்கேற்றாற் போல சோதனைகளையும் பெறுவோம்.

எல்லா இடங்களிலும் இருக்கிற கர்த்தருடைய பிரியமான ஜனங்களுக்கு நாங்கள் கூறும் புத்திமதி என்னவென்றால், மேலே குறிப்பிடப்பட்டிருக்கிற அடிப்படையானவைகளுக்கு மேலாக ஒருவர் மேல் ஒருவர் அதிக சுமைகளை வைக்க வேண்டாம். அப்பொழுது தான் அவர்கள் இலகுவாய் நிற்பார்கள். ஒருவருக்கொருவர் இலகுவாக இருக்க விடுவார்கள். தங்களால் இயன்ற அளவுக்கு ஒருவருக்கொருவர் அந்நியோந்நியத்திலும் ஒத்திசையிலும் இருப்பார்கள்.

இந்த அடிப்படைச் சத்தியங்களைக் காட்டிலும் இன்னும் அதிகமாக கூட்ட விருப்பங்கொண்டால், இரு பிரிவினரும் முன்னேறுவதற்கு பிரிவினை தான் அவசியம் என்று கருதினால் பிறகு சந்தேகத்திற்கிடமில்லாமல் பிரிவே சரியான மார்க்கமாக இருக்கும்.

நாங்கள் யாருடைய கருத்துக்களையும் விமர்சிக்கவில்லை. வேதாகமம் போதிப்பதாக தாங்கள் விசுவாசிப்பதை பிடித்துக்கொள்ள முழு உரிமை இருக்கிறது. நம்முடைய பார்வை நமது வாசகர்கள் அனைவரும் அறிந்ததே. அவைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஆதாம் ஒருவர் பாவம் செய்ததினால் அதில் அவரும் அவருடைய சந்ததியினரும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

2. ஒரு இரட்சகர் தேவையாய் இருந்து, இயேசுவே அந்த இரட்சகராகி, "தம்மை எல்லாருக்காகவும் மீட்கும் பொருளாக கொடுத்தார்."

3. தேவன் மீட்கப்பட்ட பாவிகளில் சிலரை அழைத்திருக்கிறார். மீட்கும் பொருளாக இருக்கும்படி அல்ல, யாரையும் மீட்பதற்காகவும் அல்ல, ஆனால் இரட்சகரோடு ஐக்கியமாகும்படியாக அவரது சரீரத்தின் அங்கங்களாகும்படியாக, அவரது மணவாட்டியாக அழைத்திருக்கிறார்.

4. இவர்கள் ஐக்கியமுள்ளவர்களாயிருப்பதற்கான நிபந்தனைகளும் விதிமுறைகளுமாவன: இயேசு அவர்களது மாபெரும் பரிகாரியாக, அவர்களை தமது அங்கங்களாக, அவர்களது மாம்சத்தை தமது மாம்சமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆதாமின் சந்ததியின் அங்கங்களாக அவர்களுக்கு வரக்கூடிய அவரது புண்ணியத்தை அவர்களுக்கு சாட்ட வேண்டும். பிறகு அவர்கள் பரம்பரையாக பெற்றிருக்கிற பலவீனங்கள், குறைபாடுகள், அபூரணங்கள் ஆகியவற்றிலிருந்து நீதிமான்களாக்கப்படுகிறார்கள். அவர்களது சொந்த சித்தங்கள், அவர்களது சக்திகள் மற்றும் திறமைகள் அனைத்தும் அர்ப்பணிக்கப்பட்டு, மகா பிரதான ஆசாரியரின் பாவ நிவாரண பலியின் ஒரு பங்காக அவர்களது பலி தேவனுக்கு பிரியமானதாக இருக்கும்படி செய்யப்படுகிறது.

5. இப்படியாக இரட்சகரின் பலியில் பங்கு பெற்று, முதலாம் உயிர்த்தெழுதலின் மூலம் அவரது ஜீவனில் பங்குபெறும் சலுகையை இவர்கள் பெறுகிறார்கள். இரட்சகர் புதிதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, சேர்க்கப்பட்ட அங்கங்களை விடுத்து, உலகிற்கு தமது பலியின் புண்ணியத்தை இப்பொழுது கொடுக்கிறதில்லை. அவர் தெய்வீக திட்டங்களை நிறைவேற்றுவார். யுக முடிவில் அவரது அங்கங்கள் அனைவரையும் ஆஜர்படுத்துமுன் பலியிடுவார். அவரது பலியின் புண்ணியத்தை முழு உலக பாவங்களுக்காகவும் கொடுத்து, இதன்மூலம் அவர்களுக்காக புதிய உடன்படிக்கையை முத்திரையிடுவார்.

அநேகர் சபையின் பலிக்கு அதிக மதிப்பு கொடுத்து, தவறிழைக்கிறார்கள் என்று நாங்கள் கருதுகிறோம். ஆனால் மற்ற சகோதரர்கள் சபையின் பலியில் எந்த

மதிப்பையும் காணாதபடி, சபையானது ஆண்டவரின் பலியில் பங்குபெறுவதே இல்லை என்று கூறி தவறு செய்கிறார்கள். இது நமக்கு ஒரு கடிகாரத்தின் பெண்டுலம் மூலம் ஒரு முனையிலிருந்து அடுத்த முனைக்கு செல்வதைப் போல் காணப்படுகிறது. ஆனால் நமது கருத்தோ நடுவில் இருக்கிறது. இந்த காரியத்தை நமது அநேக வெளியீடுகளில் குறிப்பிட்டு இருக்கிறோம்.

இந்த காரியங்களை முழுவதுமாக கவனித்த பிறகு, ஒரு வகுப்பானது இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று காண்கிறது. இரண்டு வகுப்புகளாக முன்னேறுகிறது. அது ஞானமான ஒன்றாக முடிவு செய்வதில் நாம் ஒத்துப்போகிறோம். ஒரு பிரிவினையின் அவசியத்திற்காக மிகவும் வருந்துகிறோம். இப்படிப்பட்ட பிரிவினை இதில் எந்த வகுப்பையும் சமூகத்திலிருந்தோ கர்த்தரின் பிள்ளைகளிடத்திலிருந்தோ பிரிவினை செய்து கொள்ள அவசியமாயிராது. ஏனெனில் இரு வகுப்பினரும் இயேசுவை இரட்சகராகவும் அவரது இரத்தம் பிரதானமாக பலனளிக்கக் கூடியதாக இருப்பதாகவும் அங்கீகரிக்கிறார்கள்.

**R5285**

## GOD'S COVENANT OF MOUNT SINAI

# சீனாய் மலையில் தேவனுடைய உடன்படிக்கை

யாத்திராகமம் 19 : 1-6

''நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படிக்கு கிருபையை பற்றிக்கொள்ளக்கடவோம்.'' - எபிரேயர் 12:28

பஸ்கா மீட்புக்கு இரண்டு மாதத்திற்கு பின்பு இஸ்ரயேலர்கள் சீனாய் மலையை அடைந்தார்கள். வழியிலே அவர்கள் தேவனுடைய கிருபை மற்றும் வல்லமை பற்றிய இரண்டு மதிப்புமிக்க பாடங்களை பெற்றார்கள். அவர்கள் ரெவிதீம் பள்ளத்தாக்கை அடைந்த போது, அவர்கள் தாகமாயிருந்தார்கள். தண்ணீர் கிடைக்கவில்லை. இங்கே மோசே கர்த்தருடைய நாமத்தில் தனது கோலினால் கற்பாறையை அடிக்க, அது அபரிமிதமாக தண்ணீரைக் கொடுத்து, அந்த சமயத்தில் அவர்களது தாகம் தீர்க்கப்பட்டது. அது சிற்றாறைப் போல அடுத்தடுத்த பிரயாணத்தில் அதிகமாக தொடர்ந்தது.

பரிசுத்த பவுல், தேவ ஆவியின் உந்துதலினால் நமக்கு குறிப்பிட்டு கூறுகிறதாவது: பாறை கிறிஸ்துவை குறிக்கிறது. பாறையை அடிப்பது அவரை அவமானமான மரணத்தில் போட்டதை குறிக்கிறது. இதன் மூலமாகவே தேவனுடைய பிள்ளைகளாக விரும்புகிறவர்களுக்கு ஜீவத்தண்ணீர கொடுக்கப்படுகிறது. அந்த பாறையின் தண்ணீர் இஸ்ரயேலர்களை தொடர்ந்து வந்தது போல தேவ கிருபையாகிய ஓடை, கிறிஸ்துவின் பலியின் மூலமாக, கிறிஸ்துவின் சீஷர்களை அவர்களது வனாந்தர பிரயாணம் முழுவதும் புத்துயிர் ஊட்டுகிறது.

சரீரத்திலும் விசுவாசத்திலும் உயிரூட்டப்பட்ட இஸ்ரயேலர்கள் தொடர்ந்து பயணித்தனர். ஆனால் புதிதான தடைகளை எதிர்கொண்டனர். போர்க்குணம் கொண்ட அமலேக்கியர், இஸ்ரயேலர்கள் தங்கள் நாட்டை பிடிக்க படையெடுத்து வருகிறார்கள் என்று நினைத்து அவர்களுடன் போர் தொடுத்தார்கள். இஸ்ரயேலர் நூற்றாண்டு காலங்களாக இருந்தது போல, சமாதானத்தை நாடுகிற ஜனங்களுக்கு இயற்கையாகவே எதிரிகளுடன் போரிடுவது அனுகூலமற்றதாக இருக்கும். எனினும் தேவன் அவர்களுக்கு வெற்றியைத் தந்தார். எனினும் அவர்களை வென்றது அவர்களது திறமையாலோ அல்லது பலத்தினாலோ அல்ல, தேவனுடைய கிருபையினாலே என்று தேவன் கூறினார்.

மோசே ஒரு உயரமான மலையில் நின்றுகொண்டு ஜனங்களுக்காக கையைத் தூக்கி ஜெபித்தார். அப்படி அவர் செய்யும் போது இஸ்ரயேலர்கள் ஜெயங் -கொண்டார்கள். ஆனால் அவர் ஜெபிப்பதை நிறுத்தும் போது, அமலேக்கியர்கள் ஜெயங்கொண்டார்கள். இதை உணர்ந்து ஆரோனும் ஊர் என்பவனும், போர் இஸ்ரயேலருக்கு ஜெயமாக முடியும்வரை மோசேயின் கைகளை தூக்கிப்பிடித்துக் கொண்டிருந்தார்கள். இப்படியாக தேவன், மோசே தான் அவர்களது பரிகாரி அல்லது பிரதிநிதி என்பதையும் மோசே இல்லாமல் அவர்களால் ஒன்றும் செய்ய இயலாது என்பதையும் சுட்டிக் காட்டினார்.

உண்மைப் பொருளில், ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் சத்துருக்களுடனான போராட்டத்தில் கர்த்தரின் உதவியின்றி ஜெயம் கொள்ள இயலாது என்பதை நாம் உணருகிறோம். பரம கானானை நாடுகிறவர்களுக்கு உலகம், மாம்சம் மற்றும் பிசாசு பொதுவான எதிரிகளாகின்றனர். இயேசுவின் சீஷர்களாகிய நாம் அவரை நமது பரிகாரியாக கொண்டிருந்தால் மட்டுமே போரில் ஜெயங்கொள்ள முடியும். "நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்." அவர் மூலமாக நாம் வெற்றியாளர்களாவோம். ஆம், வெற்றியாளருக்கும் மேலாக வெற்றி வீரராவோம். "நம்மை நேசித்து நம்மை தமது இரத்தத்தினால் வாங்கினவர் மூலமாக" நாம் வெற்றி வீரராவோம்.

### ராஜரீக ஆசாரியத்துவம் வழங்கப்பட்டது

தேவன் இஸ்ரயேலரோடு கொண்டிருந்த அனைத்து தொடர்புகளும் தேவன் ஆபிரகாமோடு செய்த மாபெரும் உடன்படிக்கையின்படியே இருந்தன; "உனக்குள்ளும் உனது சந்ததிக்குள்ளும் பூமியுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" என்ற தெய்வீக உறுதி மொழியினால் சான்றளிக்கப்பட்டது. மோசேயோ அல்லது அவரை பின்பற்றினவர்களோ ஆணையோடிணைந்த வாக்குத்தத்தத்தின் முழு முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளவில்லை. ஏனெனில் அது இரட்டையான வாக்குத்தத்தம். அது கிறிஸ்துவின் முதலாம் வருகை வரை, தேவனுடைய ஏற்ற காலம் வரை மறைக்கப்பட்டிருந்தது. அதிலிருந்து கூட அது மறைக்கப்பட்ட இரகசியமாக இருந்தது என்றும் சிலர் மட்டுமே உணர்ந்து கொண்டார்கள் என்றும் பரிசுத்த பவுல் நமக்கு கூறுகிறார். "கர்த்தருடைய இரகசியம் அவருக்கு பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கைகளைத் தெரியப்படுத்துவார்." (சங்கீதம் 25:14)

வாக்குத்தத்தமானது மூன்று பாகங்களாக பிரிக்கப்படுகிறது.

1. ஆபிரகாம் (மற்றும் அவரது பிரதிநிதித்துவப்படுத்துகிற பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள்) அதில் ஒரு பங்கு பெறுகிறவர்களாக இருந்தார்கள்.

2. ஆபிரகாமின் சந்ததியே ஆசீர்வாதத்தின் வழியாகவும் முக்கிய முகவராகவும் இருந்தார்.

3 இவர்கள் மூலமாக பூமியிலுள்ள வம்சங்களையெல்லாம் ஆசீர்வதிக்கப்பட வேண்டியிருந்தது. இந்த சுவிசேஷ யுகத்தில் பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தினாலேயே ஆபிரகாமின் வாக்குத்தத்தின் நீளம், அகலம், ஆழம் மற்றும் உயரம் வெளிப்படுத்தப்பட்டது.

இஸ்ரயேலர்களை எகிப்திலிருந்து வெளியே வரும்படி அழைத்த போது, தேவன் உடன்படிக்கையை

விவரிக்கவோ அல்லது அந்த உடன்படிக்கையின் எந்த பகுதியில் ஒரு பங்கை பெறுவார்கள் என்று கூறவோ இல்லை. ஆனால் அவர்கள் சீனாய் மலைக்கு வந்தபோது தெய்வீக திட்டத்தை உங்களால் கடைபிடிக்க முடியுமா அல்லது முடியாதா என்று விசாரித்தார். இப்படியாக அவர்கள் அந்த உடன்படிக்கையின் உயர்ந்த கிருபைக்கு தகுதியுள்ளவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

வேறு வார்த்தைகளால் கூறுவோமானால், என்னுடைய சித்தத்தை செய்ய ஒரு உடன்படிக்கைக்குள்ளாக நுழைய முழு அர்ப்பணத்திற்கு நீங்கள் தயாராயிருக்கிறீர்களா என்று கர்த்தர் கேட்டார். எகிப்தியரிடமிருந்து உங்களை எப்படி விடுவித்தேன் என்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். அதிலிருந்து இந்த இடத்திற்கு உங்கள் சகல துன்பங்கள் மற்றும் சோதனைகளில் கழுகின் செட்டையில் உங்களை சுமந்து வந்தேன். உங்களுக்கு விசுவாசம் இருக்கிறதா? உண்மையுள்ளவர்களாயிருக்கிறீர்கள். உடன்படிக்கைக்குள் நுழைய விரும்புகிறீர்களா? “நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு என் உடன்படிக்கையை கைக்கொள்வீர் -களானால் சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்..... நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்.” (யாத்திராகமம் 19:5,6)

தாங்கள்தான் ஆபிரகாமின் தயவு பெற்ற சந்ததி என்பதையும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இயற்கையான சுதந்தரர் என்பதை இஸ்ரயேலர்கள் அறிந்திருக்கும்போது, தங்கள் பிரமாணங்களை கைக்கொள்ளவும், அதை எப்படி கைக்கொள்ளுவது என்பதை மற்றவர்களுக்கு போதிக்கவும் முடிந்தவர்களாக இல்லையென்றால், மற்ற ஜாதிகளை பிரமாணத்துடன் ஆசீர்வதிப்பதற்கு கர்த்தரின் பயன்பாட்டுக்கு தகுதியுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள் என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த புரிந்து கொள்ளுதலுடன் தேவனுடைய சித்தத்தை செய்ய தயாராயிருந்தார்கள். இப்படியாக அவர்கள் முழு உலகிற்கும் ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கும்படி பிரிக்கப்பட்டு, ஒரு நியாயப்பிரமாண உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. மோசே அதன் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டார். அந்த பிரமாணங்களை கடைபிடிப்பவர்கள் என்றென்றைக்கும் ஜீவிப்பார்கள். அதை கடைப்பிடிப்பதற்குத்தக்கதாக பூமிக்குரிய சலுகைகளை பெறுகிறவர்களாக இருந்தார்கள்.

## புதிய உடன்படிக்கையின் நிழல்

இன்றைய பாடத்தின் உண்மைப்பொருளை பரிசுத்த பவுல் எபிரேயர் 12:18-21இல் நமக்கு குறிப்பிடுகிறார். இஸ்ரயேலர்கள், பார்வோன் மற்றும் அவனது சேனைகளிடமிருந்து விடுவிக்கப்பட்டது போல முடிவாக சகல மனுக்குலமும் சாத்தான், அவனது சேனைகள், விழுந்து போன தூதர்கள் மற்றும் தீய சக்திகளிடமிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்கான பிரயாணம் இஸ்ரயேலர்களை சீனாய் மலைக்கு கொண்டு வந்தது. அதே போல தேவனுடைய ஜனங்களில் விருப்பம் உள்ள கீழ்ப்படிதலுள்ள மற்றும் உண்மையுள்ள அனைவரையும் மெய்யான சீனாய் மலையாகிய சீயோன் மலைக்கு, தேவனுடைய ராஜ்யத்துக்கு முடிவாக கொண்டு வந்து சேர்க்கும். இதற்குத்தான் இயேசு, “உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக” என்று நமக்கு போதித்தார்.

இதற்கிடையில், இயேசு, மெய்யான மோசேயாகவும் ஜனங்களின் தலைவராகவும் ஆனார்; யேகோவா தேவனின் செயல்முறை திட்டத்திற்கிசைவாக அங்கத்தினர்களை அல்லது கூட்டத்தினரையும் உடன்சுதந்தரரையும் தெரிந்தெடுத்துக் கொண்டிருக்கிறார். பரிசுத்த பவுல் இது குறித்து நமக்கு விளக்குவதாவது: “தேவன், இயேசுவை சபையாகிய அவரது சரீரத்துக்கு தலையாக தந்தருளினார்.” மனுக்குலம் பொதுவாக இளைப்பாறுதலின் ஆசீர்வாதத்திற்குள் வருவதற்கு முன்பு, இந்த மாபெரும் மெய்யான மோசேயை சகோதரரிலிருந்து எழுப்பப்பட வேண்டும் என்று பரிசுத்த பேதுரு விளக்குகிறார். (அப்போஸ்தலர் 3:22,23;19-21)

இந்த முழு சுவிசேஷ யுகமும் கிறிஸ்துவின் சரீர அங்கங்களை தெரிந்து கொள்ளுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கடைசி அங்கத்தினர் தனது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும் போது, இந்த யுகமானது முடிவுக்கு வரும். மேசியாவின் யுகத்தின் மகிமையான வேலை ஆரம்பமாகும்.

## வானத்தையும் பூமியையும் அசையப்பண்ணுதல்

நமது பாடத்தின் உண்மைப்பொருள் இயேசுவின் இரண்டாம் வருகையில் புது உடன்படிக்கையை ஆரம்பிப்பதாக இருக்கும். இந்த புதிய மற்றும் மேலான உடன்படிக்கைக்கான அடிப்படை, கல்வாரியில் நமது கர்த்தர் தம்மையே பலியிட்டதின் மூலம் நிறைவேற்றப்பட்டது. அதிலிருந்து அவர் “மேலான பலிகளை” அவரது பரிசுத்தவான்களின் சரீரங்களை தேவனுக்கு பிரியமானவைகளாக நிறைவேற்றி வருகிறார். ( ரோமர் 12:1 ) சீக்கிரத்தில் “மேலான பலிகள்” நிறைவு செய்யப்படும். மாபெரும் மத்தியஸ்தர் சகோதரரிலிருந்து முழுமையாக எழுப்பப்படுவார்; பிறகு புதிய உடன்படிக்கையை ஆரம்பிப்பதற்கும், உலகத்தின் மனுக்குலத்தை, அறிவு மற்றும் பூமிக்குரிய ஆசீர்வாதம் மற்றும் பூரணத்திற்கான இளைப்பாறுதலுக்கான சந்தர்ப்பத்துக்கும் சகலமும் தயாராக இருக்கும்.

இதைத்தான் பரிசுத்த பவுல், “பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையினிடத்திற்கு” வருகிறதாக சுட்டி காட்டுகிறார். நமது பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிளறி விடுகிற சாட்சியின் உண்மைப் பொருளை நாம் எதிர்பார்க்கலாம் என்று அவர் குறிப்பிடுகிறார். சொல்லர்த்தமான சீனாய் மலையில் அசைவும் மின்னல்களும் தேவனுடைய சத்தம் மாபெரும் எக்காளத்தைப் போல கேட்கப்பட்டதைப் போல இங்கே உண்மையானதிலும் வரும். இங்கே மாபெரும் எக்காளம் என்பது தேவனுடைய எக்காளமாகிய ஏழாம் எக்காளம் ஆகும். நிழலில் இங்கே புயல், சூறாவளி மற்றும் அசையப் பண்ணுதல் ஆகியவை மதங்களாகிய வானத்தையும் சமூகம், அரசியல் மற்றும் பொருளாதாரமாகிய பூமியையும் குறிக்கும்.

அசையக்கூடிய அனைத்தும் அசைக்கப்பட்டு அழிவுக்குள்ளாக்கப்படும் என்றும், அசையாதது மட்டுமே நிலைத்திருக்கும் என்றும் அப்போஸ்தலர் தீர்க்கதரிசனமான நமக்கு உறுதியளிக்கிறார். அதாவது ஸ்தாபிக்கப்படக்கூடிய மேசியாவின் ராஜ்யம், நீதி, நியாயம் மற்றும் சத்தியத்துக்கு இசைவில்லாத அனைத்தையும் நீக்கிப் போடும். இது பூமியிலுள்ள சகல வம்சங்களையும் ஆசீர்வதிப்பதற்காக அப்பொழுது முழுவதுமாக பயன்படுத்தக்கூடிய ஆபிரகாமின் உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கு வெறும் ஒரு முன்னுரையாகும்.

## ராஜ்யத்தின் சுதந்தரர்

இயேசு தலையாக இருக்கக்கூடிய ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததியின் சரீரமாகிய அவரது உண்மையுள்ள பரிசுத்தமான சீஷர்கள் தற்போது அந்த உயர்ந்த ஸ்தானத்திற்கு பாத்திரர்தானா என்பதற்கு

சோதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு பரிசுத்த பவுலின் தலைப்பு வசனம் மிகவும் பலமாக பயன்படுத்தப்படுகிறது. "நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்கு பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையை பற்றிக்கொள்ளக் கடவோம்."

R5286

## GOD'S TEN COMMANDS

# தேவனுடைய பத்து கட்டளைகள்

யாத்திராகமம் 20 : 1-11

''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு பலத்தோடும், உன் முழுச் சிந்தையோடும் அன்பு கூருவாயாக.'' - லூக்கா 10:27

சீனாய் மலையில் தேவன் இஸ்ரயேலரோடு செய்த உடன்படிக்கை என்னவென்றால், அவர்கள் பத்து கட்டளைகளை சரியானபடி கைக்கொண்டால் அதன் மூலம் அவர்கள் பூரண மனிதர்கள் என்பதை நிரூபணம் செய்து, நித்திய ஜீவனுக்கு பாத்திரராவார்கள் என்பதாகும். பிறகு ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு பிரதானமான ஆசீர்வாதங்களை அடைவதற்கும் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக ஆவதற்கும் அவர்களுக்கு சாத்தியமாகும். இவர்கள் மூலமே தேவன் உலகத்தை ஆசீர்வதிக்க வாக்குத்தத்தம் பண்ணியிருந்தார்.

தேவனுடைய சித்தத்தை செய்யவும் ஆசீர்வாதத்தை பெறவும் வாஞ்சையாக இருந்த, தகுதியுள்ள யூதர்களின் ஆவியை பரிசுத்த பவுல் நமக்கு சுட்டி காட்டுகிறார். "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்திலிருந்து யார் என்னை விடுதலையாக்குவார்?" என்ற ஆத்தும வேதனையில் கதறுகிறதை குறிப்பிடுகிறார். அவர்களது சிந்தை, வாக்குத்தத்தத்தைக் குறித்தும் அதன் வளங்களைக் குறித்தும் உயிரோடிருந்தது. ஆனால் அவர்களது மாம்சம் மற்ற சகல ஜனங்களைப் போல விழுகையினால் அபூரணமாக இழிவான நிலையில் இருந்தது. "நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக் -கிறவைகளை செய்யாதபடிக்கு இருக்கிறீர்கள்." (கலாத்தியர் 5:17)

வேத மாணவர்கள் பத்து கட்டளைகளின் எளிமையைக் குறித்து திகைப்புடன் பார்க்கிறார்கள். அதன் அம்சங்களில் எதை அவர்களால் முழுமையாக, திருப்திகரமாக கடைபிடிக்க முடியாமல் போயிற்று என்று முதலாவது ஆச்சரியப்படுகிறார்கள். பத்து கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய ஆச்சரியமான பிரமாணங்களை நாம் உணரும் வரை, யூதர்களுக்கு காணப்பட்டது போலவே, முழு காரியமும் மிகவும் சாதாரணமாகவே காணப்பட்டது. ஆனால் அது மேலெழுந்த வாரியாக காணப்படாத ஆழ்ந்த பொருளைக் கொண்டிருக்கிறது.

இயேசு "நியாயப்பிரமாணத்தை கனப்படுத்தி மேன்மை படுத்தும்" வரை அதன் பொருளின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை வெளிப்படையாக யாரும் காணவில்லை. சகோதரனை பகைக்கிறவன் கொலை பாதகன், விபச்சார ஆசையை மனதிலே கொண்டு வருகிறவன் ஏழாவது கட்டளையை மீறுகிறான் என்று அவர் கூறுகிறார். இந்த முழு காரியத்திற்கும் ஒரு புதிய வெளிச்சத்தை அவர் காண்பிக்கிறார். ஆதாமின் விழுகையிலிருந்து, இயேசுவைத் தவிர, யூதர்களிலோ அல்லது புறஜாதிகளிலோ யாரும் ஏன் நியாயப் -பிரமாணத்தை கடைபிடிக்க முடியவில்லை என்று நமக்கு விளக்குகிறார்.

மாபெரும் போதகர் நியாயப்பிரமாணத்தின் முதல் பலகையில் உள்ளதை, மனிதனின் சிருஷ்டிகரைக் குறித்த அவனது கடமை என்ன என்பதை விளக்குகிறார். வெறும் சிலை வணக்கம் மற்றும் தெய்வ நிந்தனைக்கு மேலானதை பொருளாக கூறுகிறார். உண்மையான தேவனை கண்டுணர்ந்து, மனித இருதயத்தில் அவருக்கு முதலாவது இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே அதன் பொருள். "கர்த்தராகிய உன் தேவனை உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக" என்று அது பொருள்படுகிறது. இருதயத்தில் அல்லது பலத்தில் அல்லது மனதில் அல்லது ஆத்துமாவில் ஏற்படும் எந்த பிளவும் இந்த கட்டளையை மீறுகிறது.

### மனிதனுக்கான தேவனுடைய ஆதி கட்டளை

தேவனுடைய ஆதி பிரமாணம் மனிதனுக்கு சீனாய் மலையில் கொடுக்கப்படவில்லை. உண்மையிலேயே சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட பிரமாணம் பொதுவாக மனுக்குலத்திற்கு கொடுக்கப்படாமல் வெறும் யூதர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டது. அதன் விதிமுறைகளின்படி அவர்கள் சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கக்கூடிய தேவனுடைய ராஜரீக ஆசாரியர்களாக ஆகலாம்.

மனிதன் சிருஷ்டிக்கப்பட்ட போது தேவனுடைய ஆதி பிரமாணம் ஏதேனில் கொடுக்கப்பட்டது. தேவனுடைய பிரமாணம் ஆதாமின் இருதயத்தில் எழுதப்பட்டது. அதாவது அவன் தேவ சாயலில் அவனது சிருஷ்டிகருக்கு இசைவாக இருக்கும்படியான பண்புகளை இருதயத்திலும் மனதிலும் உடையவனாக சிருஷ்டிக்கப்பட்டான். வெறுக்கப்படுவதற்கு யாரும் இல்லாதிருக்கும் வரை அவன் நீதியை சிநேகித்து அக்கிரமத்தை வெறுத்தான். ஆனால் அதுவரை யாரும் இல்லை.

மாற்றம் வந்து, அதன் கீழ் ஆதாமின் பிள்ளைகள் தேவனுடைய சாயலில் இராமல், நீதியை சிநேகிக்காமல், பாவத்தை சிநேகித்ததில் நாம் ஆச்சரியமடைகிறோம். தீர்க்கதரிசி அறிவிப்பது போல, "அவர்கள் கர்ப்பத்திலிருந்தே வழி தப்பி போகிறார்கள்." "இதோ நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று கூறி எங்கே மாற்றம் ஏற்பட்டது என்று குறிப்பிடுகிறார். (சங்கீதம் 51:5)

மனிதனின் விழுகைக்குப் பிறகு சீரழிவு மிக வேகமாக முன்னேறியது; ஆதாமின் தலைச்சன் பிள்ளை காயீன் கொலைகாரனானான். ஏதேன் தோட்டத்தை இழந்த ஏமாற்றம், பூமி சபிக்கப்பட்டதினால் முள் மற்றும் குருக்குகளுடனான போராட்டம் ஆகியவை தாயாகிய ஏவாளின் மனதில் கோபம், ஆத்திரம் போன்றவை எழும்பி அவளை நோகச் செய்தது. இதெல்லாம் அவளது குழந்தையில் பதியச்செய்தது. அதிலிருந்து இதுவரை சாபமானது இன்னும் கீழே சென்று, அபூர்வமாக ஒரு குழந்தை குறைவான பாவத்துடனும் குறைவான சீரழிவுடனும் பிறக்கிறது. இன்னும் வேத வாக்கியங்கள் நமக்கு கூறுகிறதாவது: "நீதிமான் இல்லை. ஒருவனாகிலும் இல்லை."

### எதிர்கால நம்பிக்கை

மனுக்குலத்தின் ஆறாயிர வருட கால அனுபவங்கள், மனித பூரணம், தெய்வீக பிரமாணத்தை கடைபிடிப்பதற்கான திறமை மற்றும் விருப்பதிற்கான விதிமுறைகளைக் குறித்து யாரும் தேவனிடம் தன்னைக் குறித்து மெச்சிக்கொள்ள நாம் எதிர்பார்ப்பதை தடை செய்கிறது. இயேசு, ஆதாமின் சந்ததியில் வராததாலும், அவரது ஜீவன் பிதாவானவரிடமிருந்து நேரடியாக

வந்ததாலும், அவர் மட்டுமே தெய்வீக பிரமாணத்தை கடைபிடித்தார். அவர் சுபாவ மாறுதல் மூலம் ஒரு மனிதனானார். இப்படியாக அவர் அதிசயத்தக்க விதமாக ஜெனிப்பிக்கப்பட்டதால் அவர் "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாயிருந்தார்."

தேவன் தம்முடைய பிரமாணத்தை சரியாகவும் சந்தோஷத்துடனும் கடைபிடிக்கிறவர்களைத் தவிர வேறு யாருக்கும் நித்திய ஜீவனை அளிக்க மறுக்கிறார். பிறகு நமது இனத்திற்கு என்ன நம்பிக்கை இருக்கிறது.? உலகத்திற்கு பொதுவாக ஒரு நம்பிக்கையும், பெந்தெகொஸ்தே நாளில் ஸ்தாபிக்கப்பட்ட சபைக்கு வேறு மாதிரியான நம்பிக்கையும் இருக்கிறது. தேவன் அவரது ஏற்ற காலத்தில் மேசியாவின் ராஜ்யத்தை ஸ்தாபிப்பார் என்பதே உலகின் நம்பிக்கையாக இருக்கிறது. அது நீதியான ராஜ்யமாக இருக்கும். அதன் ஆட்சியாளராகவும் நியாயாதிபதிகளாகவும், ராஜரீக ஆசாரியர்கள் இருப்பார்கள்.

இந்த மேசியாவின் ராஜ்யம் இந்த உலகத்தின் அதிபதியை நீக்கி, அவனை ஆயிரம் வருடம் கட்டி வைப்பதின் மூலம் ஆரம்பமாகும். சீக்கிரத்தில் பூமியின் அக்கிரமங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு "இரும்பு கோலாட்சி" ஆரம்பிக்கும். நீதியை எதிர்க்கிற அனைத்தும் அடித்து நொறுக்கப்படும். இருள், அறியாமை மற்றும் மூட நம்பிக்கைக்கு பதிலாக தேவனுடைய மகிமையின் அறிவின் வெளிச்சத்தில் சந்தோஷமும் பயமும் வரும். அது சீக்கிரத்தில் உலகம் முழுவதையும் நிரப்பும். அதன் செல்வாக்கின் கீழ் பாவகரமானது எதுவும் தடை செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டு கர்த்தரின் நியாயந்தீர்ப்பு பூமியில் நடக்கும்போது உலகின் குடிகள் நீதியை கற்றுக்கொள்வார்கள். (ஏசாயா 26:9)

இதன் பலனாக சீக்கிரத்தில் முழங்கால் யாவும் முடங்கும். நாவுகள் யாவும் தேவனை அறிக்கை பண்ணும். ஆனால் தெரிந்தே எதிர்க்கிறவர்களும், பாவததை சிநேகிக்கிறவர்களும், இரண்டாம் மரணமாகிய "நித்திய ஆக்கினையில்" அழிக்கப்படுவார்கள். இந்த நிர்வாகத்தின் கீழ், ஆதாம் இழந்த மனித பூரணத்தை உலகமானது திரும்பப்பெறும். மனிதர்களின் இருதயத்தில் தேவனுடைய பிரமாணம் எழுதப்படுதலுடன் தேவனுடைய சாயலுக்கு திரும்புகிற சலுகை, கல்வாரி பலியின் மூலம் சகலருக்கும் உறுதிப்பண்ணப்பட்டது. "இயேசு கிறிஸ்து, தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்." (எபிரேயர் 2:9)

இவர்கள் அனைவரும், ஆதாம் ஆதியில் பெற்றிருந்த பூரணத்தை திரும்ப பெற்று, ஏழாயிரம் கால நன்மை, தீமை பற்றிய அனுபவங்களுடன், கடைசியில் தேவனுடைய அங்கீகரத்துடன் நித்திய ஜீவனை பெறுவார்கள். அவர்கள் மறுபடியும் சந்தோஷத்திற்காக பாவத்தை தேர்ந்தெடுக்கும் ஆபத்திற்கு கொஞ்சம் கூட போக மாட்டார்கள்.

### சபையும் நியாயப்பிரமாணமும்

பாவத்தில் பிறந்த மனுக்குலத்திலிருந்து கிறிஸ்துவின் சபையானது தெரிந்து கொள்ளப்படுகிறது. இதன் அங்கத்தினர்கள் நித்திய ஜீவனை அடைவதற்காக சீனாய் பிரமாணத்தை சரியாக கடைபிடிக்கும்படியாக அதற்கு கீழாக வைக்கப்படவில்லை. "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறீர்கள்." (ரோமர் 6:14) எனினும் நியாயப்பிரமாணமானது சபைக்கு மிகவும் விலையேறப் பெற்றது. ஏனெனில் அதை அது ஆவியின்படி பார்க்கிறது; பூரணமாயிருந்தால் அது எப்படி இருக்க வேண்டும் என்பதைக் காண்கிறது; தான் மாம்சத்தில் இருக்கும் போது பூரணத்தில் எவ்வளவு குறைவுப்பட்டிருக்கிறோம் என்பதை பார்க்கிறது; தனது மாம்சீக பலவீனத்தை எப்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை மூடுகிறது என்பதையும் கூடுதலாக பார்க்கிறது. மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின் படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறுகிறது என்ற அப்போஸ்தலரின் அறிக்கையால் இவையெல்லாம் உண்மையாக இருக்கிறது. (ரோமர் 8:4)

வேறு வார்த்தையில் சொல்வோமானால், தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு பூமிக்குரிய உரிமைகளை பலியிட்டு கிறிஸ்துவைப் பின்பற்ற தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் பண்ணுகிறவர்கள் நியாயப்பிரமாணத்திற்கு மேலாக கிரியை செய்கிறார்கள். நியாயப்பிரமாணமானது இன்னொருவருக்காக ஜீவனை கொடுக்க வேண்டும் என்று கூறாமல் தன்னைத்தான் நேசிப்பது போல பிறரை நேசி என்று மட்டுமே கூறுகிறது. இப்படியாக கிறிஸ்துவும் சபையும் பலியின் இடுக்கமான பாதையில் நடந்து நியாயப்பிரமாணத்தின் ஆவிக்குரிய தேவைகளையும் அதற்கு மேலாகவும் நிறைவேற்றுகிறார்கள். எனினும் சபையானது மாம்சத்தில் இருக்கிறது; பரம்பரையாக வந்த பலவீனம் இருக்கிறது. பூரணம் அங்கே இல்லை. பூமிக்குரிய சுபாவத்தை பலியிட்ட இவர்கள் பிதாவானவரால் புது சிருஷ்டியாக தொடர்பு கொள்ளப்பட்டு, மாம்சத்தின்படியில்லாமல், ஆவியின்படி அவர்களது இருதய நோக்கத்தின்படி நியாயந்தீர்க்கப்படுகிறார்கள்.

**R5287**

## WHO IS MY NEIGHBOUR?

## எனக்கு பிறன் யார்?

யாத்திராகமம் 20 : 12-21

"உன்னிடத்தில் அன்பு கூறுவது போல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக." - லூக்கா 10: 27

மோசேயிடம் கொடுக்கப்பட்ட பத்து கட்டளைகள் இரண்டு கற்பலகைகளில் எழுதப்பட்டிருந்தன. முதல் நான்கு கட்டளைகள் தேவனை சார்ந்திருந்தது; மற்ற ஆறு கட்டளைகள் மானிடரைச் சார்ந்திருந்தது. இந்த கடைசி ஆறு கட்டளைகளின் சாராம்சம் தான் இன்றைய பாடத்தை அமைக்கிறது. அதாவது இயேசு கூறின, "உன்னிடத்தில் அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக" என்ற வார்த்தைகளே. "செய்யாதிருப்பாயாக" என்பது அனுதின வாழ்க்கையில் நடைபெறும் ஆயிரக்கணக்கான நிகழ்வுகளுக்கு பொருந்துகிறதாயிருக்கிறது. ஆனால் "செய்வாயாக" என்பது அனைத்து நிலைமைகளையும் சேர்த்து மூடுகிறது. பிறனிடத்தில் அன்பு கூருகிறவன் அவனுக்கு தெரிந்தே வார்த்தையிலோ, செய்கையிலோ அல்லது சிந்தனையிலோ தீங்கிழைக்க மாட்டான். இப்படியாக அன்பு என்பது பிரமாணத்தின் முழு தேவைகளையும் வெளிப்படுத்துகிறது. (ரோமர் 13:10) அன்பானது பிரமாணத்திற்கு மேலாக செய்யும் சுதந்திரத்தில் இருக்கிறது. ஆனால் அது குறைவானதைச் செய்ய முடியாது.

பிரமாணத்தின் தேவைகளை நிறைவேற்றுவதின் மூலம் கர்த்தரால் கிறிஸ்தவர்கள் மட்டுமே பயனடைகிறார்கள். அவர்களது கிறிஸ்துவுடனான உறவின் மூலம் அவர்களது பலவீனத்திற்காக அவர்கள் மட்டுமே சலுகை பெறுகிறார்கள். எனினும் யூதர்களும் மற்றவர்களும் பிரமாணத்தை கடைபிடிக்கும்படி அவர்கள் எடுத்த முயற்சிகளுக்குத்தக்கதாக ஓரளவு ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறார்கள். சாதாரண மனிதன், பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதவன் ஆகையால் தேவனுடைய பிள்ளையாக இராதவன், இன்னும் அந்நியனாக இருப்பவன், நீதியின் கொள்கைகளை அங்கீகரித்து, அதை நாடி, அதை உறுதிப்படுத்தி,

குணலட்சண அபிவிருத்தி செய்ததற்கு ஏற்றாற்போல ஒரு ஆசீர்வாதத்தை பெறுகிறான். ஆகையால் தேவனுடைய தரநிலைக்கு தங்களை உயர்த்துவது சகல ஜனங்களுக்கும் எல்லா காலத்திலும் நல்லதாகவும் ஞானமானதாகவும் இருக்கிறது.

### தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக

பெற்றோர்கள் எவ்வளவுதான் வயதானவர்களாகவோ அல்லது அறியாமையிலுள்ளவர்களாகவோ அல்லது புத்தியீனர்களாகவோ அல்லது கெட்டவர்களாகவோ இருந்தாலும் அவர்களது பிள்ளைகளிடமிருந்து கவனிப்பை பெறுவதற்கு தகுதியுடையவர்களாக இருக்கிறார்கள். எனினும் மரியாதையின் வகை அல்லது அளவு, பெற்றோர்களின் குணலட்சணத்தை ஓரளவிற்கு சார்ந்திருக்க வேண்டும். பெற்றோர்களுக்கு கீழ்ப்படியாதிருப்பது என்பது எங்கும் பரவலாய் காணப்படுகையில், அது குறித்து நாம் சொல்வது கடினமான வார்த்தையாக இருப்பினும் அது உண்மையான காரியம் என்று நாங்கள் நம்புகிறோம். அதாவது கீழ்ப்படியாமை பிள்ளையினுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரினால் உண்டானதேயாகும்.

குழந்தை கெட்டவனாக பிறந்திருக்கலாம். கர்ப்ப காலத்தில் தாயின் மனதில் ஏற்பட்ட அதிருப்தி, கலவரம் போன்றவை குழந்தைகளுக்கு பிறப்பதற்கு முன்பே பதிந்து விடுகிறது. ஆகையால் எப்படிப்பட்ட பயிற்சி கொடுத்தாலும் குழந்தையை முழுமையாக குணத்தில் மீட்டெடுக்க முடியாது. இப்படிப்பட்ட காரியங்களில் பிள்ளைகளிடத்தில் உள்ள கீழ்ப்படியாமை, சந்தோஷம் இல்லாதிருத்தல் போன்ற குணங்களினிமித்தம் பெற்றோர்கள் பொறுமையாகவும் நீடிய பொறுமையாகவும் இருப்பது நல்லது.

அநேகமாக இதற்கு பெற்றோர்களை ஓரளவுக்கு பழி கூற முடியும். ஒருவேளை அவர்களது சபை ஊழியர்கள் தேவனுடைய பிரமாணங்கள், மனித செயல்பாடுகள், அதை மீறுவதால் வரும் தண்டனைகளை போதிக்காமலிரு-ந்திருக்கலாம். ஆனால் மனித சுபாவத்தின் பலவீனங்களை புரிந்து கொள்ளவும் அதை எதிர்த்து போரிடும் வகையிலோ, உதவிடும் வகையிலோ அல்லது ஆவிக்குரிய உணவுகளையோ கொடுப்பதற்கு பதிலாக இனிமையாக சொற்பொழிவை ஆற்றியிருப்பார்கள். ஒருவேளை தவறு முழுவதும் தாயையுடையதாக இல்லாதிருந்திருக்கலாம். தன் பிள்ளையினிடத்தில் தனக்கும் கடமை இருக்கிறது என்பதை தந்தை மறந்து போயிருக்கலாம். அந்த முக்கியமான காலப்பகுதியில் மனைவிக்கு உதவிடும் வகையில் இரக்கம், நற்குணம், பெருந்தன்மை முதலிய குணங்கள் அவள் மனதில் வரும் வகையில் உதவியிருக்க வேண்டும். அவன் அதை செய்யாமல் போயிருக்கலாம்.

எப்படியேனும் மனசாட்சியுள்ள பெற்றோர்கள் தங்கள் நெறி தவறிய பிள்ளையை கர்த்தருக்கேற்ற பராமரிப்பிலும் போதனையிலும் பயிற்றுவிக்கும் அருமையான வேலையை பெற்றிருக்கின்றனர். உண்மையாக இப்படி முயற்சிக்கும் பெற்றோர்கள் அதிகமாக பாராட்டப்படவும் ஊக்குவிக்கப்படவும் வேண்டும். மேலும் நமக்கு பரிச்சயமாகும் உயர்ந்த குணமுடைய மனிதர் மற்றும் ஸ்தீரியின் பெற்றோர்களை நாம் உயர்வாக நினைக்க வேண்டும். அந்நியர்களாகிய நாமே அவர்களது பெற்றோர்களை பாராட்டுவோமானால், பிள்ளைகள் இன்னும் அதிகமாக பாராட்ட வேண்டும்.

### ஞாயிறு பள்ளிகளின் விளைவு

நவீன கால, திறமையான, செல்வாக்கு மிகுந்த எழுத்தாளர் ஒருவர் ஞாயிறு பள்ளிகள் ஒரு விதத்தில் நன்மையை கொண்டு வந்திருந்தாலும், இன்னொரு வகையில் கணிசமான அளவுக்கு தீங்கை செய்துள்ளது என்று கூறுகிறார். அதாவது, பெற்றோருக்கான பிள்ளைகளின் மரியாதையை பலவீனப்படுத்தியுள்ளது; பிள்ளைகளிடத்தில் பெற்றோருக்கான பொறுப்பை உணர்ந்து கொள்ளுவதிலிருந்து அவர்களை விலகச்செய்துள்ளது. பெற்றோர்கள் தெய்வீக ஏற்பாட்டின்படி குறிப்பாக தம்முடைய பிள்ளைகளுக்கு தேவனுடைய ஆசாரியர்களாக இருக்கின்றனர். அவர்கள் எந்த அளவுக்கு இந்த பொறுப்பிலிருந்து பின் வாங்குகிறார்களோ அல்லது இந்த ஸ்தானத்தின் நன்மதிப்பு புறக்கணிக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு அவர்களது குழந்தைகளின் மீதான செல்வாக்கை இழப்பார்கள். மேலும் ஞாயிறு பள்ளியின் வாரம் ஒன்றிற்கு நடைபெறும் ஒரு மணி நேர வகுப்பானது, பெற்றோரின் தொடர்ச்சியான மேற்பார்வையின் இடத்தை ஒரு போதும் எடுத்துக்கொள்ள முடியாது. பதினாறு வயது முதல் இருபது வரையிலான சிறுவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மிகவும் ஆபத்தான குற்றவாளிகளாக இருக்கின்றனர் என்றும் இவர்களது எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது என்றும் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. ஆகையால் வளர்ந்துவரும் தலைமுறையினரை சரியானபடி பயிற்றுவிப்பதில் நல்ல உள்ளம் கொண்ட அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும். பெற்றோருக்குரிய அதிகாரத்தை ஊக்குவித்து, அவர்களுக்கு கீழ்ப்படிவதை வலியுறுத்துவதன் மூலம் தெய்வீக கட்டளைக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நீண்ட கால வாழ்வும், செழிப்பும் இந்த கட்டளையின் மூலம் யூதர்கள் வாக்களிக்கப்பட்டிருந்தனர்.

### "கொலை செய்யாதிருப்பாயாக"

மனித இனத்தின் நன்மைக்காக மிருகங்களை கொல்வதையோ அல்லது ஜீவனை தக்கவைத்துக் கொள்ள பூச்சிகளை அழிப்பதையோ இந்த பிரமாணம் தடை செய்யவில்லை. குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கொடுப்பதையும் அது தடை செய்யவில்லை. இல்லையென்றால் தெய்வீக பிரமாணத்தில் சொல்லப்பட்டதற்கும், தெய்வீக வழிகாட்டுதல் மூலமும் மோசேயின் கீழும் செய்யப்பட்டவைகள் எல்லாம் முரண்பாடாக இருந்திருக்கும்.

எனினும் இந்த பிரமாணமானது ஜீவனை மதிக்க வேண்டும் என்றும் அதற்கு ஆபத்து தரக்கூடாது என்றும் போதிக்கிறது. இந்த பிரமாணமானது கொலை பண்ணுகிற அளவுக்கு கோபங்கொள்ளக்கூடாது என்றும் அதன் பின் விளைவுகளின் பயத்தால் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கூறுகிறது என்று இயேசு அறிவித்தார். இப்படியாக இந்த பிரமாணமானது, ஆட்களை வைத்து வேலை வாங்குகிறவர்களோ அல்லது மேற்பார்வை செய்பவர்களோ சக தொழிலாளரின் பாதுகாப்புக்கு, எந்தவிதமான ஆபத்தும் ஏற்படாதபடி பொறுப்பெடுத்துக் கொள்வதை கடமையாக ஆக்குகிறது. சுய நன்மை அல்லது பண ஆசை என்ற ஆபத்தை அனுமதிப்பது இந்த பிரமாணத்திற்கு கீழ்ப்படிவதற்கு பின்னடைவை ஏற்படுத்தும், கிறிஸ்தவத்தை கடைபிடிப்பதாகாது.

### விபச்சாரம் செய்யாதிருப்பாயாக

பாலியல் பசியின் சீரழிவு ஒரு விழுகையாக இருக்கிறது. தூய்மையின்மை, கற்பின்மை, சுயகட்டுப்பாடு இல்லாதிருத்தலே இதற்கு காரணம். இந்த அனைத்து சரிவுகளும் உண்மையான சந்தோஷம், நீதி மற்றும் தேவனிடமிருந்து பிரிக்கும். ஒரு கணவனும் ஒரு மனைவியும் சேர்ந்து ஆதியிலே தேவனால் ஏதேனில் ஏற்படுத்தப்பட்டதே, குடும்பத்திலும் தேச வாழ்க்கையிலும் நீதியின் மூலைக்கல்லாக காணப்படுகிறது. பரிசுத்தம், களங்கமின்மையே தெய்வீக தேவையாக இருக்கிறது.

### "களவு செய்யாதிருப்பாயாக"

களவு என்பது இன்னொருவருக்கு சொந்தமானதை எடுத்துக்கொள்ளுதல் ஆகும். மின்சாரம், நீராவி போன்ற கண்டுபிடிப்புகளின் மூலம் நமது அறிவு பெருகியிரா –விட்டால் உலகமானது இன்றைக்கு திருடர்களின் சொர்க்கமாக இருந்திருக்கும். கடற்கொள்ளை, கடல் திருட்டு, கொள்ளை, கன்னமிட்டு திருடுதல் இவையனைத்தும் அறிவுள்ளவர்களால் கண்டிக்கப்படுகிறது. அநேகர் நுட்பமாக திருடுகிற சந்தர்ப்பத்தை பெறுகிறார்கள். அதாவது பங்கு சந்தை யூகம், பிரகாசமான ஒளி வீசும் வாய்ப்புகளுடனான போலியான கம்பெனி, விளக்கங்கள் இவைகளெல்லாம் பலவீனமானவர்கள், குறைவாக அறிந்தவர்கள் ஆகியவர்களிடமிருந்து அதிக அனுகூலம் பெறுவது. இது கூட திருடுவதுதான்.

வரியை தவறாக திரும்ப பெறுதல் கூட திருட்டு தான். சுங்க வரி கட்டாமல் பொருட்களை கடத்துவதும் திருட்டு தான். சேவைக்கான ஊதியத்தை கொடுக்காமலிருப்பதும் திருடுவதுதான். எல்லாவற்றிலும் மோசமான திருட்டு எது என்பதை ஷேக்ஸ்பியர் தனது வார்த்தைகளில் குறிப்பிடுகிறார்.

"எனது பணப்பையிலிருந்து திருடுகிறவன்,

குப்பையை திருடுகிறான்,

ஆனால் என்னிடமிருந்து எனது நல்ல பெயரை

பறிப்பவன், தனக்கு வளமை தராததை

என்னிடமிருந்து திருடுகிறான், உண்மையிலேயே

என்னை ஏழையாக்குகிறான்."

"யாரையும் தூஷியாதே" என்கிற வேதவாக்கிய போதனை அறியப்படாமல் இருப்பதாக தெரிகிறது. இதன் பலனாக அநேகர் தங்கள் குணலட்சணத்தை தாங்களே கெடுத்துக்கொள்கிறார்கள். மற்றவர்களை சந்தோஷத்தை கெடுத்து முன்னரே வேதனையில் இருக்கிற சிருஷ்டிகளை இன்னும் துன்பப்படுத்துகிறார்கள்.

### "பொய்சாட்சி சொல்லாதிருப்பதாக"

இந்த பிரமாணம் ஆயிரக்கணக்கான வழிகளில், தினமும் மீறப்படுகிறது. நாம் விற்கிற அல்லது வாங்குகிற பொருட்களைக் குறித்து திரித்துக் கூறி பிறரை ஆயிரக்கணக்கான வழிகளில் அவதூறு செய்கிறோம்.

### "பிறருடையதை விரும்பாதிருப்பாயாக"

மற்றவர் பொருளை அடைய வேண்டும் என்கிற ஆசை திருட்டிற்கும், கொலைக்கும், அவதூறு செய்வதற்கும் முன்னே வருகிறது. பிறருடையதை அடையும் ஆசை ஒவ்வொரு குற்றத்தோடும் கிரியை செய்கிற இருதய நோயாக இருக்கிறது. ஏனெனில் எல்லா பாவங்களுக்கும் சுயநலமே அடிப்படை. சுயநலம் பிறர் பொருளை விரும்புகிறது. பட்டியலில் இது முடிவாக வைக்கப்படுகிறது. தேவனுடைய பிரமாணத்தை கைக்கொள்ளுகிறவர்கள், பிறர் பொருளை விரும்புவதிலிருந்து தன்னை காத்துக்கொள்ள வேண்டும்.

**R5290**

## "GOD MANIFEST IN THE FLESH"

## "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்"

"தேவபக்திக்குரிய இரகசியமானது.... மகா மேன்மையுள்ளது; தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார்." – 1 தீமோத்தேயு 3:16

மகா உற்பத்தி ஸ்தானமும் ஜீவனின் ஊற்றுமாகிய தேவன் தம்மை பல்வேறு சிருஷ்டிகளில் வெளிப்படுத்த விரும்பினார். குமாரர்களாக அவர் அங்கீகரித்த அவரது அறிவுள்ள சிருஷ்டிகள் அனைவரும் தெய்வீக சாயலில் இருந்தார்கள். தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாகிய லோகோஸ் தேவ சாயலில் இருந்தார். அவர் ஆவியின் ஜீவியாக மாத்திரமல்ல (தேவன் ஆவியாயிருக்கிறார்) அதற்கும் மேலாக, அவர் அவருடைய சிருஷ்டிகரும் பிதாவானவரின் குணலட்சண சாயலில் ஆவியின் ஜீவியாக இருந்தார்.

மேலும் லோகோஸ், தேவதூதர்கள், கேருபீன், சேராபீன் போன்ற பல்வேறு ஜீவிகளை சிருஷ்டிக்கும் பிதாவானவரின் செயல்முறை ஏஜெண்டாக ஆன பொழுது அவர்கள் அனைவரும் பிதாவானவரின் ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டனர். தேவ புத்திரர்கள் அனைவரும் பல்வேறு சிருஷ்டிகளை பார்த்ததால் ஏகமாய் பாடி கெம்பீரித்தார்கள். இன்னும் வித்தியாசமான சிருஷ்டிகளை ஏற்படுத்த நேரம் வந்தபோது இதற்கு முன் இல்லாத சிருஷ்டியாகிய மனிதர்களை, தேவன், லோகோஸ் மூலமாக தமது சாயலின்படியும் தமது ரூபத்தின்படியும் உண்டாக்கினார். மனிதனை சிருஷ்டித்த பிறகு தேவன் நல்லது என்று கண்டார்.

முதல் மனிதனைப் பற்றிய விவரம் எட்டாம் சங்கீதத்தில் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. "நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர். உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர். ஆடு மாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடலில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர்." இவையெல்லாவற்றிற்கும் ஆதாமே தலைவராக அல்லது ராஜாவாக இருந்தார். தேவதூதர்கள் பிரதிநிதித்துவம் செய்யாததை ஆதாம் பிரிதிநிதித்துவப்படுத்தினார். ஏனெனில் தூதர்கள் யாருக்கும் மேலாக வைக்கப்படவில்லை. தேவனே எல்லாவற்றிற்கும் ஆளுனர். ஆதாமும் லோகோசும் மட்டுமே ஏதோ ஒன்றிற்கு மேலாக இருந்தனர்.

தேவன் மனிதனை உண்டாக்கின போது, குறிப்பாக இதில் தம்மைப் போல் உண்டாக்கினார். அதாவது ஆதாமுக்கு ஆளுகையை கொடுத்தார். தேவதூதர்கள் சிருஷ்டிக்கப்பட்ட போது கேருபீன், சேராபீன் மற்றும் தாழ்ந்த தேவதூதர்களாகிய பல்வேறு ஜீவிகளில் தேவன் வெளிப்பட்டார். மனித சிருஷ்டிப்புக்கு வந்த போது மனிதன் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ஆனால் தேவன் விழுந்துபோன மாம்சத்தில் வெளிப்பட்டார் என்று நாம் இப்பொழுது சொல்ல முடியாது. ஆரம்பத்திலிருந்த தேவ சாயல் பாவத்தினால் அழிக்கப்பட்டது. பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகை கணிசமான அளவுக்கு தேவ சாயலின் இந்த தடயங்களை அழித்து விட்டது. நாம் சிருஷ்டிகரின் இந்த சாயலையும் ரூபத்தையும் இழந்திருக்கிறோம் என்று வேத வாக்கியங்கள் நமக்கு தெளிவாக காண்பிக்கின்றன.

ஆதாம் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்ததால், அவர் தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார். ஆனால் ஆதாம் பாவியான போது, இந்த உறவை இழந்தார். யூதர்கள் யாரும் தேவனுடைய பிள்ளைகளல்ல. ஆபிரகாம் தேவனுடைய நணபன் என்று

அழைக்கப்பட்டான். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு தீர்க்கதரிசிகள் மற்றும் இஸ்ரயேலில் மற்றவர்களையும் தேவன் அங்கீகரித்து, மாபெரும் ஆசீர்வாதங்கள் அவர்களுக்குரியது என்று குறிப்பிட்டிருந்தாலும், அவர்கள் தேவனுடைய குமாரர்களாக கருதப்பட முடியவில்லை. தேவன் ஆபிரகாமிடம், நண்பனே உன்னுடன் என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன் என்று கூறினார். "உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள்."

ஆனால் எல்லாமே ஆபிரகாமின் உண்மையான மாபெரும் சந்ததி வரும்வரை காத்திருக்க வேண்டியிருந்தது. மெய்யான ஆபிரகாமின் சந்ததியும் மீட்பருமாகிய இவர் எப்படி வருவார் என்பது குறித்து பதிவுகள் நமக்கு இருக்கின்றன. லோகோஸ் எப்படி மாம்சமாகி மனிதர்களிடையே வாழ்ந்தார் என்பதை சிந்தித்து முடிவுக்கு வந்த பிறகு பரிசுத்த யோவான், இயேசு, பிதாவின் ஒரே பேறானவரின் மகிமையை முழு சத்தியத்தை முழு கிருபையை பெற்றிருந்தார் என்று அறிவித்தார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டதில் எல்லாவற்றிற்கும் மேலாக இதுவே வழியாக இருந்தது.

தாழ்ந்த மிருகங்கள் ஆதாமை பார்த்த போது, தேவனுடைய உயர்ந்த பிரதிநிதித்துவத்தை பார்த்தன. தேவனுடைய சாயலில் யாரையும் மாம்சமாக்க முடியவில்லை. தேவன் தம்முடைய குமாரனை உலகிற்கு அனுப்பும் நேரம் வந்தபோது, மனிதனுடைய மீட்பராகக் கூடிய மாபெரும் சலுகையை அவருக்கு முன் வைத்தார். அவர் மாம்சமாக்கப்பட்ட போது அவரை பார்த்த அனைவரும் பிதாவின் ஒரே பேறானவரின் மகிமையைக் கண்டார்கள். யாராவது அவரை நோக்கி பார்த்த போது, தேவனை பார்க்க முடிந்ததால் எப்படி இருக்குமோ அப்படி பார்த்தார்கள்.

தேவன் மோசேயிடம் கூறியதாவது: "ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடு இருக்கக்கூடாது." தர்சு பட்டத்தாணாகிய சவுல் மகிமையடைந்த கிறிஸ்துவின் கனநேர காட்சியை மட்டுமே பார்த்தான். எனினும் மகிமை அதிகமாக இருந்ததால், அவன் முழுவதும் பார்த்திருந்தால் அவன் ஜீவித்திருக்க முடியாது. இயேசு, பிதாவினுடைய தற்சொரூபமாக இருந்தார். இயேசு பிதாவினுடைய தற்சொருபமாக இருக்கிறார். தேவனைக் கண்டு யாரும் உயிரோடிருக்க முடியாது. மகிமையடைந்த இயேசுவைப் பார்த்து யாரும் உயிரோடிருக்க முடியாது.

### தேவன் பிரபுக்களில் வெளிப்பட்டார்

கிறிஸ்துவின் ராஜ்யம் மனிதர் மத்தியில் ஸ்தாபிக்கப்படும் பொழுது, மேசியா ஆயிரம் வருடத்தில் பூமியின் பிரதிநிதிகளைக் கொண்டு ஆளுகை செய்து மனுக்குலத்தை உயர்த்தும்படியான ஒரு ஏற்பாட்டை தேவன் செய்திருக்கிறார். இந்த வேலைக்காக தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் பிற பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்களை தயார்பண்ணி வைத்திருக்கிறார். இவர்கள் பூமிக்குரிய பூரணத்தில் எழுவதற்கு பாத்திரராக எண்ணப்படுகிறவர்கள். அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாததினால் உயிர்த்தெழுதலில் சுபாவ மாற்றத்தை பெறமாட்டார்கள். பெந்தெகொஸ்தே நாள் வரை நமது கர்த்தரைத் தவிர ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் யாரும் இல்லை. "இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை." ஆகையால் அந்த பழைய ஏற்பாட்டுக்கால பாத்திரவான்கள் தேவனுக்கு பிரியமாயிருந்த சாட்சியை மட்டுமே பெற்றிருந்தார்கள். அவர்கள் தேவனுக்கும் நீதியின் கொள்கைகளுக்கும் உண்மையாயிருந்தபடியினால் இந்த பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்களில் சிலர், "கல்லெறியுண்டார்கள். வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினால் வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும், வெள்ளாட்டுத் தோல்களையும், போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்தார்கள். உலகம் அவர்களுக்கு பாத்திரமாயிருக்கவில்லை." (எபிரேயர் 11:37,38)

இவர்கள் தேவனுடைய வாக்குத்தத்தத்தை பெற்றிருந்தாலும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவில்லை. உதாரணத்திற்கு, தேவன் ஆபிரகாமிடம் வாக்குத்தத்தம் பண்ணியிருந்தாவது: "நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் நான் உனக்கு கொடுப்பேன்." தேவனுடைய வார்த்தை உண்மையாவதற்கு ஆபிரகாம் உயிர்த்தெழுந்து வரவேண்டும். அவர் அந்த பூமியை பெற வேண்டும். ஆனால் அவரிடம் கனம், மகிமை மற்றும் சாகாமை பற்றியோ, தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுவது மற்றும் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரர் ஆவது குறித்தோ பரிந்துரை செய்யப்படவில்லை. (அப்போஸ்தலர் 7:5; எபிரேயர் 11:8-10, 17, 39, 40)

இது கிறிஸ்துவில் ஆரம்பித்தது. கிறிஸ்து நித்திய ஜீவன் மற்றும் அழியாமையைப் பற்றிய அறிவைமாத்திரம் மனிதருக்கு கொண்டு வராமல், இந்த ஜீவனை அவரோடு பெற்றுக்கொள்ளும் சலுகையையும் கொண்டு வந்தார். "முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதிப்பண்ணப்பட்டிருக்கிறது." (எபிரேயர் 2:3) ஆனால் பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள், தேவனை நம்பவும், அவருடைய வாக்குத்தத்தின் பேரில் நம்பிக்கை வைக்கவும், அந்த வாக்குத்தத்தம் நிறைவேற காத்திருக்கவும், விசுவாசம் கொண்டிருந்தார்கள். தேவன் சாபத்தை நீக்கிப் போடுவார் என்ற வெறும் தகவலை மட்டுமே அவர்கள் பெற்றார்கள். ஆபிரகாமின் சந்ததிதான் தேவனுடைய ஆசீர்வாதத்திற்கு மகிமையான வழியாக இருக்க வேண்டியிருந்தது. "உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியிலுள்ள வம்சங்கெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்." ஆகையால், பரிசுத்த பவுல் அவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையவில்லை என்று நமக்கு கூறுகிறார். "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றை தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருக்கிறார்." (எபிரேயர்11:40)

நாம் ஆசீர்வாதத்தை பெறுவதற்கு முன்பு பழைய ஏற்பாட்டு கால பாத்திரவான்கள் அவர்களுக்குரிய ஆசீர்வாதத்தை பெற முடியாது. மணவாட்டி மகிமைப் படுத்தப்பட வேண்டும், பிறகு பழைய ஏற்பாட்டு காலத்து விசுவாசிகள் வந்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளலாம். உடனே ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் மற்ற பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்கள் அனைவரும் கிறிஸ்துவின் முதல் பிள்ளைகளாக இருப்பார்கள். அவர்கள் பிதாக்களுக்கு பதிலாக குமாரர்களாக இருப்பார்கள். பிறகு அவர்களை பிரபுக்களாக, பூமியை ஆளுகிறவர்களாக ஆக்குவார்.(சங்கீதம் 45:16) பரிபூரண மனிதர்களாக உயிர்ப்பிக்கப்பட்டு தேவனுடைய ரூபத்தில் இருப்பார்கள். இந்த பழங்கால பாத்திரவான்கள் ஒவ்வொருவரிலும் தேவன் மாம்சத்தில் வெளிப்படுவார். அப்பொழுது அவர்கள் பூமியின் பிரபுக்களாக இருந்து, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் கீழ் பூமியை ஆளுகை செய்வார்கள்.

"நீங்கள் ஆபிரகாமையும், ஈசாக்கையும், யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிறவர்களாக காண்பீர்கள்" என்று இயேசு சொன்ன போது இதை அவர் உறுதிப்படுத்தினார். (லூக்கா 13:28) அவரே கூறியதாவது: "இன்னும் கொஞ்ச காலத்திலே உலகம் என்னை காணாது." (யோவான் 14:19) நமது உயிர்த்தெழுதலின் வல்லமையினால் நாம் ஆவியின் நிலைமைக்கு மாற்றப்படவில்லையென்றால்,

மானிட நிலையில் இருக்கப்போகிறவர்களைப் போல அவரை இனி காணவே முடியாது. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களும், இன்னும் உயிரோடு இருக்கிறவர்களும் அவர் வெளிப்படுகையில் அவரைப் போல ஆக்கப்படுவார்கள். "ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே மறுரூமாக்கப்படுவார்கள்." நாம் மறுரூபமாகும் அந்த நிமிஷத்திலே, நமது கர்த்தரை மட்டுமல்ல, எல்லா பரிசுத்த தூதர்களையும் நாம் இப்பொழுது காணக்கூடாதிருக்கிற சகல ஆவிக்குரிய ஜீவிகளையும் காண்போம். அவர்கள் மனுக்குலத்தை காண்பார்கள். ஆனால் மனுக்குலமோ அவர்களை காணமாட்டார்கள்.

தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்; முதலில் ஆதாமின் விஷயத்தில்; இரண்டாவது இயேசுவின் விஷயத்தில்; மூன்றாவது அவர் பழைய ஏற்பாட்டுகால பாத்திரர்களில் மாம்சத்தில் வெளிப்படுவார். இவர்கள் உலகத்தில் உள்ள மற்றவர்களைக் காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலை அடைவார்கள்.

## நமது கர்த்தரின் பரிசுத்தத்தின் அழகு

போர்ச்சேவகர்கள் இயேசுவுக்கு கேலியாக முள்முடியை வைத்து, சிவப்பான அங்கியை உடுத்தி நியாயந்தீர்ப்பின் மண்டபத்திற்கு கொண்டு வந்தபோது, பிலாத்து அவரை வியப்புடன் பார்த்து ஆச்சரியத்துடன், "இதோ இந்த மனுஷன்" என்று கூறினான். "இதோ இந்த முகத்தை பாருங்கள்." (ஸ்ட்ராங் ஒத்த வாக்கிய புத்தகத்தை பார்க்கவும்) நான் புறஜாதியான், உங்கள் இனத்தைச் சேர்ந்தவன் அல்ல. பூமியிலே ஒரு மகிமையான யூதனை என்னிடத்தில் நியாயந்தீர்ப்புக்காக கொண்டு வந்திருக்கிறீர்கள். யாரும் உள்ளத்திலே அழகான குணலட்சணம் இல்லாமல், அதன் அழகு இப்படி முகத்திலே பிரதிபலிக்காது. ஒரு மனிதன் தீய குணமுடையவனாக இருந்தால், அந்த அம்சங்களை அவனால் மறைக்க முடியாது. ஒருவன் அன்பானவனாக இருந்தால் அது அவனது முகத்தில் தெரியும். பிறகு நமது கர்த்தரைக் குறித்து நாம் என்ன நினைப்போம்! அவரது முகம் ஆச்சரியமான அழகாக இருந்திருக்க வேண்டும்! அவரது கருணையான பிரசங்கத்தையும் அவரது ஆச்சரியமான அழகையும், தேவனுடைய ரூபத்தையும் காண ஜனங்கள் கூட்டமாக அவரைக் காண வந்ததில் ஆச்சரியமேதுமில்லை!

சங்கீதக்காரன் கேட்கிறதாவது: "மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? நீர் அவனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டினீர்." (சங்கீதம் 8:4,5) ஆனால் மனிதன் பாவத்தில் ஒதுக்கப்படும் நிலையில் இருளில் விழுந்து விட்டான். சாத்தானின் வசீகர சக்தி பாவத்திற்கு கிரியை செய்தது. அது மனிதனை அவனது சிருஷ்டிகரின் ரூபத்திலிருந்து விழும்படி செய்தது. பாவத்திலிருந்தும் அபூரணத்திலிருந்தும் மனுக்குலத்தை திருப்பிக்கொண்டு வருவதே தேவனுடைய மாபெரும் நோக்கமாக இருக்கிறது. நீதியாக இருக்க விரும்புகிற அனைவரையும் தேவன் உயர்த்துவார்.

"தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்‌-காகவும் மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்று சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம்." (எபிரேயர் 2:9) கல்வாரியில் மீட்கும் வேலையில் தேவனுடைய பரந்த அடிப்படை போடப்பட்டதை நாம் காண்கிறோம். மனித மீட்புக்கு மீட்பரின் ஜீவனே மீட்கும் பொருள் என்பதை நாம் காண்கிறோம். "மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்டவர் மேசியா வகுப்பார்); பின்பு அவர் வருகையில் (கிரேக்கு அவருடைய பிரசன்னத்தில்) அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்." (1 கொரிந்தியர் 15:21-23) இயேசு கூறுகிறதாவது: "முதலாம் உயிர்தெழுதலுக்கு பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானு-மாயிருக்கிறான்." இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடே கூட ஆயிரம் வருடம் அரசாளுவார்கள். (வெளிப்படுத்தல் 20:6)

ஆகையால், "தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார்" என்பது தெளிவாக மனிதனாகிய இயேசுவில் அவரது பரிபூரணத்தில் காட்சிப்படுத்தப்பட்டது. ஆனால், இயேசு யோர்தானில் யோவானிடம் ஒப்புக் கொடுத்த போது, அவர் முப்பது வயதை அடைந்த போது, அவர் தம்மை பலியாக ஒப்புக்கொடுத்த போது, தேவன் சிறப்பாகவும் குறிப்பாகவும் கிறிஸ்துவின் மாம்சத்தில் வெளிப்பட்டார். "தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன். புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது." அங்கே அவர் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக தம்மை மாசில்லாமல் ஒப்புக்கொடுத்தார். தெய்வீக அங்கீகாரம் அவர் மேல் புறா வந்ததின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது. பரிசுத்த ஆவி புறா வடிவில் இருக்கிறது என்று அல்ல, தேவன் வெளியரங்கமான ஒரு வெளிப்பாட்டை யோவான் பார்க்கும்படியும், இவர் மேசியா என்பதை குறிக்கவும் தேவன் செய்தார். இதனால் யோவான் சொல்லுகிறதாவது: "ஆவியானவர் புறாவைப் போல் வானத்திலிருந்து இறங்கி, இவர் மேல் தங்கினதை கண்டேன்."

இயேசுவின் ஞானஸ்நானத்திலிருந்து தேவன் அவரோடு கூட விசித்திரமான முறையில் நிலைத்திருந்தார். அதுபோல, தேவன் நம்மிலும், நாம் தேவனிலும் நிலைத்திருக்கிறோம் என்று சபையைக் குறித்து அப்போஸ்தலர் யோவான் குறிப்பிடுகிறார். ( 1 யோவான் 4:16) பிதாவானவர் கிறிஸ்துவில் நிலைத்திருந்து தெய்வீக திட்டங்களை அறியும்படி அவரை தகுதிப்படுத்தினார். நமது கர்த்தர் கூறியதாவது: "கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்கு பார்வையையும் பிரசித்திப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தை பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்." (லூக்கா 4:16-21; ஏசாயா 61:1-3)

## வனாந்தரத்தில் நமது கர்த்தரின் சோதனை

இயேசு பரிசுத்த ஆவியை பெற்ற நேரத்திலிருந்து, பரலோக காரியங்கள் அவருக்கு அறியும்படி செய்யப்பட்டது என்று நாம் வாசிக்கிறோம். ஏனெனில் அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "ஜென்ம சுபாவ மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை அறியான்... அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிற-வைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்." ஆகையால் இயேசு பரிசுத்த ஆவியின் ஜெனிப்பித்தலை பெற்ற போது, அவர் ஆவிக்குரியபடி ஆராய்ந்து நிதானித்தலை பெற்றுக்கொண்டார். பழைய ஏற்பாட்டு நிழல்கள் தமக்கே பொருந்துவதாகக் கண்டார். வனாந்தரத்தில் சர்ப்பம் கூட தம்மை குறிப்பதாகக் கண்டார். இவைகளை அவர் பார்த்த போது, அவர் வனாந்தரத்தில் இருந்தார் என்பதை நாம் நினைவு கூருகிறோம். அனைத்து

வேதவாக்கியங்களையும் தனது சிந்தையிலே வைத்திருந்தார். சிறு பிராயத்திலிருந்தே அவர் ஜெப ஆலயங்களிலே கலந்து கொள்ளுகிற ஒரு வழக்கத்தை பெற்றிருந்தார். அவரது பரிபூரண சிந்தையில் வேத வாக்கியங்கள் முழுமையாக பதிந்து விட்டன. வேத வாக்கியங்களை அவர் விரும்பும் போது எடுத்துக்கூற முடியும்.

நாற்பது நாள் முடிவில் உபவாசத்தினால் அவர் பலவீனமாக இருந்த போது, அவரை சோதிப்பதற்கு சத்துருவானவனுக்கு அது ஏற்ற சமயமாக இருந்தது. அவரது பலியின் மரணத்திற்கு சம்பந்தப்பட்ட அனைத்து அவமானம் மற்றும் நிந்தைகள் பற்றிய எண்ணங்கள் அனைத்தும் அவர் முன்னே நின்றது. அது மட்டுமே ஒருவருடைய இருதயத்தை பயப்படச் செய்வதற்கே போதுமானது! தான் ஒரு தெய்வ நிந்தனையாளராகவும், தேவனுக்கு எதிராகவும் எண்ணப்பட வேண்டியிருக்கிறது என்பதை அவர் உணர்ந்த அந்த நொடிப்பொழுதே, சாத்தானுக்கு சந்தர்ப்பம் கிடைத்த நேரமாக இருந்தது. இயேசு சோதிக்கப்படும்படியாக பிதாவானவர் அனுமதித்தார்; அந்த குறிப்பிட்ட நேரத்தில் அவரை சோதிக்கும்படி சத்துருவானவனை அனுமதித்தார்.

பிறகு சாத்தான் நமது கர்த்தரின் மனதில் பேசினான். நான் உன்னை நன்றாக அறிவேன். கடந்த காலத்தில் நீண்ட காலமாக நாம் பரிச்சயமானவர்களாக இருந்தோம். எந்த வேலைக்காக நீ வந்திருக்கிறாய் என்பதை நான் அறிவேன். நீ ஞானஸ்நானம் பெற்ற போது, உன்மேல் வந்த வல்லமையை நீ உணரவில்லை என்பதை நான் அறிவேன். தேவனுடைய வல்லமை உன் மேல் எப்படி வந்தது என்பதை நான் பார்த்தேன். நீ செய்ய வேண்டியது, இந்த கல்லுகளை அப்பமாகு என்று கட்டளையிட வேண்டியது மட்டும் தான். நீ பெரிய காரியங்களை செய்ய முடியும் என்று நான் உணருகிறேன். இந்த காரியத்தில் நான் உன்னுடன் சேர்ந்துகொள்ள விரும்புகிறேன். ஆனால் உனக்கு முதலில் சாப்பிடுவதற்கு ஏதாவது வேண்டும்.

இயேசு சாத்தானை அறிவார். சாத்தான் லூசிபர் என்பதை அறிவார். அவன் தெய்வீக அரசாங்கத்துக்கு எதிராக கலகஞ் செய்து இந்த கிரகத்தில் சிறையிலடைக் -கப்பட்டவன் என்பதை அவர் அறிவார். சாத்தான் இயேசுவிடம் தோன்றிய போது, அவர் ஒளியின் தூதனாக தோன்ற முயற்சித்திருப்பான் என்றும் தேவன் பக்கம் இருக்க விரும்புவதாகவும், தேவனுக்கு ஒத்துழைக்க விரும்புவதாகவும் பாசாங்கு செய்திருப்பான் என்று நாம் உறுதியாக கூறுகிறோம். இயேசு, தனக்கு கொடுக்கப்பட்ட வல்லமை தனது ஜீவனை தக்கவைத்து கொள்ளுவதற்காக அல்ல என்பதை அறிவார். சோதனைக்கு அவர் இடங்கொடுக்கமாட்டார்.

ஆகையால் அடுத்து சாத்தான் அவரை உயர்ந்த மலையில் கொண்டு போய் நிறுத்தி, (இது அவர்கள் மனதிற்குள் இருந்தது) எப்படி அவன் (சாத்தான்) “இந்த உலகத்தின் அதிபதியாகவும்” இன்னும் அனைத்து ராஜ்யங்களுக்கும் அதிபதி என்பதை காண்பித்தான். உனக்கு உதவி பண்ணக்கூடிய வல்லமையை நான் பெற்றிருப்பதை நீ பார் என்று அவன் கூறினான். இப்படிப்பட்ட உதவி இல்லாமல் உன்னால் இருக்க முடியுமா? நான் உனக்கு அனுதாபம் காட்டுகிறேன். நீ மனுக்குலத்தை காப்பாற்றி, அவர்களை மரணத்திலிருந்து விடுவிப்பாய். தேவனுடைய திட்டப்படி நீ பாடுபடுவதற்கு பதிலாக நாம் சேர்ந்து வேலை செய்வோம், நீ பாடுபடத் தேவையில்லை. ஆனால் முதலாவது என்னை அங்கீகரிக்க வேண்டும். இந்த வழியில்தான் நான் ஆரம்பித்தேன். எப்படிப்பட்ட ராஜ்யத்தை நான் ஸ்தாபிக்கக்கூடும் என்பதை நான் காண்பிக்க விரும்பினேன். நான் கூறினதாவது: “நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்.” என் சொந்த ராஜ்யத்தை நான் பெற்றிருப்பேன். நீ உள்ளே வந்து என்னுடன் பங்கு பெறு என்று ஆலோசனை கூறுகிறேன். நீ கேட்கிற சகல மகிமைகளையும் உனக்குத் தருவேன். நான் இந்த உலகத்தின் அதிபதியாக இருக்க உத்தேசிக்கிறேன். எல்லாம் என் கைக்குள் இருக்கிறதை நீ பார்க்கவில்லையா?

ஆனால் இந்த சோதனைகளில் இயேசு ஜெயங்கொண்டார். மறுபடியும் அவரை சோதிப்பதில் பிரயோஜனம் இல்லை என்று அவன் சிந்திக்கிற அளவுக்கு வெற்றி முழுமையாக இருந்தது! அவர் பட்டினியாக இருக்கும்போது அவரை அசைக்க முடியவில்லை என்றால் மேலும் அவரை சோதிப்பதில் பிரயோஜனம் இல்லை என்று அவன் நினைத்தான். பதிவு செய்யப்பட்டிருக்கிறபடி அதன் பிறகு அவன் இன்னொரு முயற்சியை எடுக்கவே இல்லை.

### அவதாரக் கொள்கை வேதத்திற்கு இசைவானதல்ல

இதற்கு பிறகு இயேசு, நன்மை செய்கிறவராயும், வியாதியஸ்தரை சொஸ்தப்படுத்துகிறவராகவும், ஜனங்களுக்கு போதிக்கிறவராகவும் சுற்றித்திரிந்து எல்லாம் தேவனுடைய சித்தத்திற்கு மிகவும் இசைவாக இருந்தது. பிதாவானவர் ஒரு மாம்ச சரீரத்தில் அவதாரம் எடுத்து வந்திருந்தால், அவர் தமது சொந்த சித்தத்தை மிகவும் பூரணமாக செய்திருக்க முடியாது. ஆனால் இயேசு அவதாரம் எடுத்து வரவில்லை. இயேசு அவதாரம் எடுத்தார் என்பது இருண்ட காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கொள்கையாக இருக்கிறது. ஏனெனில் அவர் தம்மைத் தாமே தாழ்த்தி, மனிதனாகி, “மரணபரியந்தமும் அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத் தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும் பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு தந்தருளினார்.” (பிலிப்பியர் 2:8-11)

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**